# தென்மொழி

## தானே அழியும் தமிழன்!

தமிழனைப் பிறர் யாரும்
தாழ்த்தவில்லை — அவன்
தப்பியே தாழ்த்துகின்றான்! — இந்தத்
தமிழனைப் பிறர் யாரும்
வீழ்த்தவில்லை — அவன்
தமையனே வீழ்த்துகின்றான்!

தமிழனைப் பிறர் யாரும்
சுரண்டவில்லை — இந்தத்
தமிழனே சுரண்டுகின்றான்! — இங்குத்
தமிழனைப் பிறர் யாரும்
கெடுக்கவில்லை — அவன்
தனயனே கெடுத்து நிற்பான்!

தமிழ்நாட்டைப் பிறர் யாரும்
ஆளவில்லை — இந்தத்
தமிழனே அடிமை தந்தான்! — இன்று
தமிழையும் பிறர் யாரும்
சிதைக்கவில்லை — இந்தத்
தமிழனே சிதைத்து நிற்பான்!

தமிழ்ப் பண்பைப் பிறர் யாரும்
குலைக்கவில்லை — இந்தத்
தமிழனே குலைத்து நிற்பான் — நல்ல
தமிழ்மானம் தனையாரும்
வாங்கவில்லை — இந்தத்
தமிழனே விற்றுவிட்டான்!

தமிழனைப் பிறர் யாரும்
வளைக்கவில்லை! — அட,
தமிழனே குனிந்து கொண்டான்! — இங்குத்
தமிழனைப் பிறர் யாரும்
ஏவவில்லை — இந்தத்
தமிழனே பணிந்து விட்டான்!

சுவடி 13
ஓலை : 2.

விலை
உரு: 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 494:** ஐயா, பல்வேறு தடைகளையும் கடந்து 'தென்மொழி' மீண்டும் வந்துள்ளது கண்டு பேருவகை அடைந்தேன். ஆசிரிய வுரை மிகவும் சிறப்பு. இக்காலத்தில் இதழ்கள் நடத்துவோர் 'படித்த முட்டாள்'களைப் போன்று நடந்து கொள்வதாகவே தெரிகிறது. ஆங்கில அறிவை நன்கு பெருக்கிக்கொள்ள வேண்டுமானால் ஆங் கிலச் செய்தித் தாள்களைத் தொடர்ந்து படித்து வந்தால் போதும். ஆனால் ஓரளவு தமிழறிவு உடைய ஒருவர், நம் தமிழ் நாட்டுச் செய் தித் தாள்களையோ, பிற இதழ்களையோ தொடர்ந்து படித்தாரெனில், தமக்குள்ள ஓரளவு தமிழறிவையும் இழந்து போவார் என்பது உறுதி. இத்தகையோரை எச்சரிப்பது போன்று ஏறத்தாழ ஐம்ப தாண்டுகளுக்கு முன்னர் மறைமலையடிகளார் கூறிய கருத்தொன்று இப்போது மிகவும் பொருத்தமுடைத்தாகின்றது. "எவ்வகைப் பொருளையும், எத்தகைய கருத்தையும் தெரிவித்தற்கு எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் இருப்பவும், அவற்றைப் புறந்தள்ளி மற்றை மொழிச் சொற்களை அதன்கட் கொண்டுவந்து புகுத்தலே ஒரு பெருங் குற்றமாகும்; அதன் மேலும், இயற்கைக்கு மாறாய் வருந்திச் சொல்லவேண்டும் அவ்வயல் மொழிச் சொற்களை இயற்கையோ டொத்து மெல்லென நடக்குந் தமிழ்ச் சொற்களிடையே சேர்த்துக் கூறுதல் அதனினும் பெரியதொரு குற்றமாம்."

இவர்களில் ஒரு சிலர் ஆங்கில இதழ்களும் உடன் நடத்துகின் றனர். அவ்வயல் மொழியான ஆங்கிலத்தில் இவர்கள் காட்டும் செப்பமான மொழி நடையும், பொறுப்பும் நம்மை வியக்கச் செய் கிறது. அதில் நூற்றிலொரு பங்கு மொழிச்செப்பமோ, பொறுப்போ கூட, இவர்கள் தமிழைப் பொறுத்த அளவில் காட்டுவதில்லை. ஆகவேதான் இவர்களைப் "படித்த முட்டாள்"கள் என்று கூறவேண்டி யுள்ளது. — இரெ. இறைமகிழ்நன், தஞ்சாவூர்.

**0 : 495 :** தனிமைச் சுவைத்தமிழ் காக்கும் 'தனிமை'த்தமிழ! வணக்கம். 'தென்மொழி' மீண்டு(ம்) வந்தது. மிக்க மகிழ்ச்சி; வழக்கமான நெஞ்சக் கவற்சியும்! பொருளியலில் 'புறநலக் காட்சி' யுள்ள தென்மொழிக்கு அகநலம் அமைவது குதிரைக் கொம்பே. இருக்கின்ற அன்பர்கள் பொருள் இருக்கின்ற அன்பர்களாய் இல் லையே. வறுமையுடன் போராடும் தமிழன்தான் வண்டமிழ் அன்னை யுடன் சீராடும் பேறுள்ளவனாய் இருக்கின்றான். காலம் வரும் காலம் வரும் என எதிர்நோக்கி நம் காலம் திரும்பா வழியில் செல்வதுதான் எச்சம். இந்தத் தமிழர்கள் என்றும் திருந்திவிடப் போவதில்லை. ஏக்க நிலைகளை ஆக்க நிலைகளாய் மாற்ற உழைத்தாலும் பலனோ ஏமாற்ற நிலைதான். எனினும் நன்னெறி என்று நாமுணர்ந்த நெறி யில் நெடு நடையிடுவோம். தாங்களிட்ட வித்தின் இக்கால முளைகள் எழுந்தெழுந்து கருகிடினும் என்றோ(?) ஒருநாள் கிளைத்துப் படர்ந்து மலரட்டும். இருள் நீங்கிப் பொழுது புலரட்டும். நாம் இருக்கின்ற வரையில் நம் பணி தொடரட்டும்.

—[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.]



# உள்ளத்தை ஒளியாமல் உலகில் பதிக்கிறேன்!

'நினைத்ததை' யெல்லாம் எழுதுகின் றேனும்!
நினையாத தெல்லாம் எழுதப் புகுந்த,என்
நெடுநாள் நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
நினைத்தெழு தாமல் எதை—எழு துவது?
நினையாமல் எழுதும் 'நிலை'யெனக் கில்லையே!

'எண்ணிய' தெல்லாம் எழுதுகின் றேனும்!
எண்ணாத தெல்லாம் எழுதப் புகுந்த,என்
இனிய நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
எண்ணி எழுதாமல் எதை—எழு துவது?
எண்ணாமல் எழுதும் 'இழி'வெனக் கில்லையே!

'வந்ததை' யெல்லாம் எழுதுகின் றேனும்!
வாராத தெல்லாம் எழுதப் புகுந்த,என்
வாழ்கின் ற நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
வந்ததை எழுதாமல் எதை—எழு துவது?
வராததை எழுதும் 'வழுக்'கெனக் கில்லையே!

'கண்டதை' யெல்லாம் எழுதுகின் றேனும்!
காணாத தெல்லாம் எழுதப் புகுந்த,என்
கனிவான நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
கண்டெழு தாமல் எதை—எழு துவது?
காணாமல் எழுதும் 'கை'எனக் கில்லையே!

'மனம்போன' வாறெலாம் எழுதுகின் றேனும்!
மனம்போகா வாறெலாம் எழுதப் புகுந்த,என்
மதிப்புடை நண்பர் ஒருவர்சொல் கின்றார்!
மனம்போன தெழுதாமல் எதை—எழு துவது?
மனம்போகா தெழுதிடும் 'மலிவு'எனக் கில்லையே!

'உள்ளத்தை' ஒளியாமல் உலகில் பதிக்கிறேன்!
உலகுக்கு ஒளியாமல் உள்ளதைச் சொல்கிறேன்!
கள்ளத்தைப் பழகிடும் 'கணக்கு'எனக் கில்லை!
காசுக்கு எழுதிடும் 'கர'வெனக் கில்லையே!

தென்மொழி
இலக்கிய இதழ்

சுவடி: 13. ஓலை: 2.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!

சுறவம்-கும்பம்-தி. பி. உ००எ-சனவரி-பெப்ருவரி-1976.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

ஆசிரியர், ஆசிரியவுரை எழுத
இயலாத நிலையில் உள்ளார்.—அமைச்சர்.

# அவியுணவும், செவியுணவும்.

மாந்தன் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று, நீர், உணவு என்னும் மூன்றனுள், முதலது உடல் நலத்திற்கேற்ற இடத்திலெல்லாம் இருக்குமிடத்திலேயே முயற்சியின்றி இலவசமாகப் பெறக்கூடியது; இடையது பஞ்சமில்லாத காலமெல்லாம் சிறு முயற்சியாற் பெறக்கூடியது; இறுதியதே விளைவுக்காலமெல்லாம் முயற்சியினாலோ, விலைகொடுத்தோ பெறக் கூடியதாகும்.

நாகரிக வாழ்க்கைக்கு வேறு பல பொருள்களும் வேண்டுமாயினும், உயிர் வாழ்க்கைக்கு வேண்டியதே இன்றியமையாததாதலின், மாந்தன் கவலைப் பட்டுத் தேடவேண்டிய முதன்மையான பொருள் உணவொன்றே

உணவினாலேயே உயிர் உடம்பில் நிற்பதுடன், உடம்பும் உரிய வளர்ச்சியடைகின்றது. உணவின் மாற்றமே உடம்பு. உடம்பின் நன்னிலையே உயிர் நிலை,

" நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீருப் நிலனும் புணரி யோரீண்(டு)
உடம்பு முயிரும் படைத்திசி னோரே" (புறநா. 18)

உணவு பெறுதற்குரிய பல்வேறு தொழில்களைப் பயில்வதற்கும், அவற்றைச் செய்தற்கும், உரிய பருவத்தில் மணம் புரிவதற்கும், பின்னர் மக்களைப் பெற்று வளர்த்தற்கும், நீண்டகாலம் உடம்பின் நன்னிலை வேண்டியிருத்தலின், உலக வாழ்க்கையை விரும்புவோ ரெல்லாம் உடம்பைப் பேணுவது இன்றியமையாத தாகின்றது.

இனி, பண்பட்ட மக்கள் இம்மை வாழ்க்கைக்கு மட்டுமன்றி மறுமை வாழ்க்கைக்கும் அறிவுபெற வேண்டியிருத்தலின், அதன் பொருட்டும் உடம்பின் நீள் நன்னிலை இன்றியமையாததாகும்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்(று)
உடம்பினை யுள்ளிருந் தோம்புகின் றேனே."

என்பவை திருமூலர் திருமந்திரங்கள். (724, 725).

எனவே, மாந்தன் இருமை வாழ்விற்கும் இன்றியமையாதது உடம்பு என்பது பெறப்பட்டது. இத்தகைய உடம்பை உருவாக்கு வதும் இறுதிவரை நிலைப்படுத்துவதும் உணவே.

உணவை விளைப்பது உழவுத்தொழில். அத்தொழிலை மக்கள் அனைவரும் மேற்கொள்ளினும், இரு நிலைமையால் உணவுத்தட்டு ஏற்படும். அவற்றுள் ஒன்று மழையின்மை; இன்னொன்று மக்கட் பெருக்கம்.

மழையின்மை நீடிக்காது; உலகம் ஒருங்கே அழியும் ஊழி யிறுதிவரை, பார் முழுதும் பரவவுஞ் செய்யாது. ஆதலால், பஞ்சக் காலத்தில் வள நாட்டினின்று வறட்சி நாட்டிற்கு வேண்டிய உணவை வருவித்துக் கொள்ளலாம். ஆயின், மக்கட் பெருக்கத்தால் ஏற்படும் உணவுத்தட்டு நிலைத்ததும் நீக்க முடியாததுமாகும். மழை ஏராள மாகப் பெய்யினும் உணவுப்பொருள் விளைவது நிலமே யாதலாலும்,

மக்கட் பெருக்கத்திற் கேற்ப நிலமும் விரிவுறாமையாலும், நில வரம்பீடும் பகிர்ந்துண்டலும், குடும்ப மட்டுப்பாடும் அரசியலேற்பாடாக அமைகின்றன. இவ்வகை அரசியலே கூட்டுடைமை (Socialism) என்பது.

கூட்டுடைமை என்னும் ஆட்சி முறை இக்காலத்தே யானாலும், அதன் உயிர்நாடிக் கூறான பகிர்ந்துண்டலை, ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, தெய்வப் புலமைத் திருவள்ளுவர்,

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது" (227)

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (322)

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (1107)

என்னும் குறள் மணிகளால் நெறியிட்டுக் கூறியுள்ளார்.

அவர் காலத்தில் மக்கட் பெருக்கமுமில்லை; நிலக்குறைவுமில்லை. அவை யிருந்திருப்பின்,

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்." (1040)

என்று கூறியிரார்.

ஆகவே, அவர் இக்காலத்தில் இருந்தாராயின், நில வரம்பீட்டிற்கும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கும் நெறி வகுத்தே யிருப்பார்.

அவர் இன்று இல்லாவிடினும், அவர் போங்கிலேயே, இந்தியத் தலைமை மந்திரினியாரான திருமாட்டியார் இந்திரா காந்தியம்மையார், இருபான் குறிப்புப் பொருளாட்சித் திட்டத்தை வகுத்திருப்பது, இந்தியர் மீது இறைவன் கொண்ட பேரருளென்றே கருதுதல் வேண்டும்.

மக்கள் ஆறறிவு படைத்த உயர்திணை என்னும் உயர்ந்த உயிரினத்தைச் சேர்ந்தவராதலால், புறவுடம்பிற்குரிய அவியுணவை மட்டுமன்றி அகவுடம்பிற்குரிய அறிவுணவையும் அரும்பாடுபட்டேனும் தேடி நுகர்தல் வேண்டும். அவியுணவென்றது அவித்த அல்லது சமைத்த உணவை. நாகரிக மக்களுணவு அவிக்கப்பட்டதே என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. அறிவுணவு செவி

வாயிலாகக் கேட்டு உட்கொள்ளப் படுதலால் செவியுணவெனப் பட்டது,

"செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து"

என்று நன்னூற் பாயிரங் கூறுதல் காண்க.

அவியுணவை மட்டும் ஒருவன் விரும்புவானாயின், அவன் உயர்திணையைச் சேர்ந்தவனாகான். உடம்பால் உயர்திணையாயினும் உளத்தால் அஃறிணையாகவே கருதப்படுவான். அவனால் மக்களினத்திற்கே இழிவுஉண்டாகும். அதனால்,

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" [412]

என்று செவியுணவின் பெரும் சிறப்பை எடுத்துக்கூறி,

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்." [420]

என்று செவியுணவு கொள்ளாதவனை இறப்ப இழித்தும் பழித்தும் கூறினார் திருவள்ளுவர்.

ஆதலால், திரவிடத்திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமுமான உலக முதல் உயர்தனிச் செம்மொழியாகிய ஒப்புயர்வற்ற தமிழை, தாய்மொழியாகக் கொண்டிருந்தும், அதனைச் சற்றும் பேணாது, தமிழ் வந்து வயிற்றை நிறைக்குமா என்று புறக்கணித்துக் கூறுவது, தன்னைத் தமிழனென்று சொல்லிக் கொள்பவனுக்குச் சற்றும் தகாது. செவியுணவுண்டு கொண்டே அவியுணவும் பெற இயலும் போது, ஒருவன் ஏன் தமிழைத் தள்ளவேண்டும்? தமிழைத் தமிழ் மொழியாகக் கொண்டவன் தமிழ்நாட்டில் தமிழரிடைத் தமிழிற் பேசித்தானே வாழவொண்ணும்! அது கருதியேனும் கூட்டுடைமைக் கொள்கையன் தமிழைப் போற்றுக. தான் போற்றுவிடினும் போற்றுவாரை இயன்றவரை போற்றுக.

(ஞா. தேவநேயன்.)

# தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர்.

தமிழ் உருவில் தமிழ்ப்பகைவர் இருக்கின்ருர்—அவர்
தமிழர்களின் தாலிகளை அறுக்கின்ருர் !

உமிழ்ந்ததெல்லாம் நக்கித்தின்னும் நாய்கள்—மேல்
உள்ளவர்க்குக் காட்டிக்கொடுக்கும் பேய்கள் ! (தமிழ்)

கற்றவர்போல் நடிக்கும், பழகும் ஒன்றி—ஒரு
காசுக்காக மலமும் தின்னும் பன்றி !
உற்றவர்போல் பேணிவரினும் பழுதை—நன்றி
உணர்விலாது கெடுக்கப் பார்க்கும் கழுதை ! (தமிழ்)

கட்சிபேசும், தலைமைதாங்கும் தமிழால்—பெருங்
கயவர்களின் கூட்டஞ்சேர்க்கும் தமிழால் !
எச்சிலைக்கு நாக்கைநீட்டிப் படுக்கும்—மேல்
இருப்பவர்க்கே இனத்தைக்காட்டிக் கொடுக்கும் ! (தமிழ்)

அழைப்பிலாது நமதுவீட்டை நண்ணும்—மெய்
அனபன்போலச் சுவைக்கச் சுவைக்கத் தின்னும் !
உழைப்பிலாது பிழைக்கப் பார்க்கும் ஓரி—தமிழ்க்(கு)
ஊறுசெய்யும் முனையுள்ளம் மாறி ! (தமிழ்)

'மக்கள்போல்வர் கயவர்' என்பர் குறளார் !—அவர்
மாண்பறியார்; கீழ்மை நெஞ்ச இருளார் !
குக்கல்போல வாழவர்; கொள்கைக் குள்ளர்—நாளும்
குறும்புபேசித் திரிவர்; பொய்மைக் கள்ளர் ! (தமிழ்)

---

## நன்றி !

பொங்கல் வாழ்த்துகள் அனுப்பிய தென்மொழியன்பர்கள் அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்ருேம்.

—அமைச்சர்.

# அயர்வைக் கொல்லடா!
# தோளை உயர்த்தடா!

1. உள்ளம் விழுந்ததா? தூக்கி நிறுத்தடா!
உடலம் சோர்ந்ததா? மேலும் வருத்தடா!
கள்ள மாந்தராம் கயவர் நடுவிலே,
கடுமை உழைப்படா; மகிழ்ச்சி முடிவிலே;

2. உறவு பகைத்ததா? உதறித் தள்ளடா!
ஊரும் வெறுத்ததா? எதிர்த்து நில்லடா!
துறவுப் போக்கிலே, தூயர் துணையிலே
துணிவைக் காட்டடா. கொள்கைப் புணையிலே!

3. வறுமை உற்றதா? பசியைக் கொல்லடா!
வாழ்க்கை கசந்ததா? துயரை வெல்லடா!
பொறுமை கொள்ளடா, புல்லர் உரையிலே!
பூட்கை சாற்றடா வெற்றிக் கரையிலே!

4. சூழ்ச்சி மிகுந்ததா? உரையில் விழுத்தடா!
சூடு பறக்கநின் உணர்வில் கொளுத்தடா!
தாழ்ச்சி செய்யுமுன் பகைவர்க் கிடையிலே,
தமிழை நினையடா. வேங்கை நடையிலே!

5. பொய்ம்மை நிறைந்ததா, வெடித்துச் சிரியடா!
பூண்ட வெற்றிகள் சரிக்குச் சரியடா!
மெய்ம்மை ஒளிர்வதே பொய்ம்மை இருளிலே!
மேட்டைக் காண்பதே பள்ளச் சரிவிலே!

6. புகழ்ச்சி மொழிகளோ தூசென் றெண்ணடா!
புனைவுச் சொற்களோ புழுதி மண்ணடா!
இகழ்ச்சி நெரிந்ததா? சோர்வைப் புதையடா!
ஏசு புத்தரும் உணர்ந்த கதையடா!

7. வினைக்குத் தனியனோ? வெற்றி நினக்கடா!
விரகு. சூழ்ச்சிகள் துண்டு துணுக்கடா!
நனைக்கும் பனி,மழை, நறுக்கும் வெப்பமோ,
நலிவைத் தருமெனில் தொண்டுக் கொப்புமோ?

8. ஒற்றை உழவிலும் கற்றை விளைவடா!
உண்மைப் பயிரிலும் ஊழ்க்கும் களையடா!
அற்றைப் புகழெலாம் இற்றை உயிர்ப்படா!
அயர்வைக் கொல்லடா! தோளை உயர்த்தடா!

---

## திருத்தம்.

நூலாசிரியப் பாடல் ௧௧ - இன் விரிப்பின் முடிவில் (24-ஆம் பக்கம்) "[தொடரும்]" என்பது அச்சுப்பிழைபாகும். அன்பர்கள் திருத்திக்கொள்வார்களாக.

# செய்தித்தாள்களும், வானொலியும், திரைப்படங்களும்-2.

மொத்தத்தில் நம் நாட்டுச் செய்தித் தாள்கள் அதிலும் தமிழ்த் தாள்கள், செய்தித் தாள்கள் என்று சொல்வதற்கே தகுதி யற்றவை. அதற்குக் கரணியங்கள் இவை. 1. அவை நூற்றுக்கு எண்பது பங்கு வெறும் வணிக நோக்குடன் நடத்தப் பெறுகின்றன 2. எனவே, அவை மக்களின் அறிவு முன்னேற்றத்திலோ, வாழ்வியல் முன்னேற்றத்திலோ கருத்துச் செலுத்தாமல், அவர்களை ஏமாற்றிக் காசு பறிப்பதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயல்படுகின்றன. இந்நிலையில், அவை கள்ளக் கடத்தல்காரர்களைவிட, கறுப்புச்சந்தை நடத்துபவர்களை விடக் கொடியவை 3. அவை, செல்வர்களின், முதலாளிகளின் கடைக்கண் பார்வைக்காக, அஃதாவது விளம்பரங் களுக்காகவும், நன்கொடைகளுக்காகவும், காத்துக் கிடப்பதால், அவர்களின் மறைமுகக் கொள்ளையடிப்புகளுக்குத் துணையாக இயங்குகின்றன. சில தாள்கள் அவர்களின் கைக்கூலிகளாகவே இயங்குகின்றன. 4. மக்களுக்கு அறிவூட்டும் செய்திகளைவிட, அவர் களிடத்தில் பரபரப்பூட்டும் அல்லது கவர்ச்சியூட்டும் செய்திகளையே பரப்பிக் காசு பறிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால், குமுகாயச் சீரழிவுகளுக்குப் பெரும்பாலும் இவையே கரணியமா கின்றன. 5. மக்களுக்கு உறுதி பயக்கின்ற அல்லது நன்மை விளைக் கின்ற செய்திகளிற் பெரிதும் கவனம் செலுத்தாமல், அவர்கள் தெரிந்து கொள்ளத் தேவையற்ற, அவர்களுக்கு வேண்டாத, திருட்டுகள், கொள்ளையடிப்புகள், ஒழுக்கக் கேடுகள், திரைப்பட நடிக நடிகையரின் வாழ்க்கை நடைமுறைகள், அவர்களின் விருப்பு வெறுப்புகள், இன்னும் அவர்களின் உள்முகக் கமுக்கங்கள் முதலிய வற்றிலேயே கவனம் செலுத்திப் பெரும்பாலும் அவை தொடர்பான செய்திகளையே தருகின்ற வகையில், மக்களின் வலுக் குறைவைப் பயன்படுத்தி, அவர்களின் அறியாமையைக் காசாக்கும் தன்மையில் —அவை, ஏமாற்றுதல். (Cheating), வஞ்சித்தல் (Fraud), அறிவை மயக்கிப் பறித்தல் (Delusion), கடமையில் தவறுதல் (Defection) முதலிய குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றன. 6. அவை, அரசுக்கும் மக்களுக்கும் பொதுவான, ஒரு நடுநிலையான போக்கில் இயங்குவதில்லை. அஃதாவது, அரசின் கொள்கைகளையும், கோட் பாடுகளையும் மக்களுக்கும், மக்களின் குறைபாடுகளையும் வேண்டு கோள்களையும் அரசுக்கும் தெரிவித்து, அவர்களுக்கிடையில் ஓர் இணைப்புப் பாலமாக விருந்து, நாட்டின் அமைவான நிலைக்கு இசை வாக நடப்பதில்லை. அதற்கு மாறாக, மக்களை அரசுக்கெதிராகத்

தூண்டிவிடும் வகையிலும் நடந்து, தன் நடுநிலைப் போக்கையும் மக்கள் தொண்டையும் புறக்கணித்து விடுகின்றன. 7. அவை, விளம்பர வருமானத்தையே எதிர்பார்த்திருப்பதால், போலி விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் உண்மையான வாணிகத்திற்குப் பெரிதும் தடையாயிருந்து பொய் வாணிகங்களைப் பெருக்கி, நாட்டில் பொருளியல் வீழ்ச்சிகளை உண்டாக்குகின்றன. 8. அவை, எப்பொழுதும் நாட்டின் கீழ்நிலை மக்களின் உணர்ச்சிகளுக்குத் தீனிபோடும் வகையிலேயே செய்திகளையும் படங்களையும் வெளியிடுவதால், நாட்டில் ஒழுக்கக் கேடுகள் நிறைவதற்கும், குமுகாயக் குற்றங்கள் மலிவதற்கும் முதற் பெரும் கரணியமாக இருக்கின்றன. 9. அவை, தாம் எழுதும் மொழியின் தூய்மை பற்றியோ, செப்பம் பற்றியோ கொஞ்சமும் கவலைப்படாமல், தமக்குத் தெரிந்த கருத்தை, தெரிந்த முறையில், தெரிந்த சொற்களைக் கொண்டு தெரிந்த மொழியில், தெரிவிக்கும் குறைந்த தகுதியுள்ளவர்களை பொறுப்பாளர்களாக அமர்த்தி, தாய் மொழிக்கும், மரபு நிலைகளுக்கும் பெரிதும் தீங்கு செய்கின்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரை, இத்தீங்கு அளவிறந்து பரவி வருகிறது. 10. இவை; ஒன்றால் தமக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்னும் அடிப்படையிலோ, அன்றால், தமக்கு வேண்டிய கட்சி, வேண்டாத கட்சி என்னும் அடிப்படையிலோ, அல்லது தம் இனம், தம் மதம் என்னும் அடிப்படையிலோ, மட்டும் தேர்ந்து அவற்றிற்கேற்பவே செய்திகளைத் திரித்தும், சுருக்கியும், அல்லது அளவுக்கு மீறிப் பெருக்கியும் வெளியிடுவதால், என்றும் இவை வெளியிடும் செய்திகளில் உண்மையோ, திண்மையோ இருப்பதில்லை. இவை வெளியிடும் எந்தச் செய்தியும் வழக்கு மன்றத்திற்குப் போனால் நிற்பதில்லை. எனவே இவற்றைப் படிப்பதால் எந்த உண்மையும் தெரிந்துகொள்ள முடிவதில்லை.

—ஆகவே, நம்நாட்டுச் செய்தித் தாள்களை, குறிப்பாக, தமிழ்ச் செய்தித் தாள்களை உண்மையான பொதுமக்களின் நலன் நாடும் தாள்களாக என்றும் கருத முடிவதில்லை. மேற்கூறிய இந்நிலைகளுக்கு முற்றிலும் பொருந்தி வராத ஓரிரு நடுநிலைத் தாள்களும் இங்குண்டு அவற்றை நாம் என்றும் பாராட்டவே செய்கின்றோம்.

இனி, இங்குள்ள செய்தித் தாள்களைப் போலவேதாம், நம்நாட்டு வானொலி நிலையங்களும் ஏனோ தானோ என்னும் போக்கிலேயே செயல்பட்டு வருகின்றன. ஒரு நாளில், ஒன்றிரண்டு மணி நேரங்களுக்குக்கூட நம் வீட்டு வானொலிப் பெட்டியைத் தொடர்ந்து திறந்து வைத்திருக்க முடிவதில்லை. 'வானொலியை ஒழிக்கத்தான் முடியவில்லை; ஒழுங்குபடுத்தவுமா முடியவில்லை' என்று பலர் அரற்றிக்கொள்வ

தைப் பலமுறை நாம் கேட்டிருக்கின்றோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி ஆகிய மூன்று வானொலி நிலையங்களிலும் ஆரியப் பார்ப்பனர்களே அளவுக்கு மீறி நிறைந்திருக்கின்றனர். இவர்கள் மட்டும் எப்படி அங்கு, நாட்டின் நிரவல் நிலைக்கு மாறாக, ஒரேயிடத்தில் குவிக்கப் பெற்றனர். அல்லது குவிய முடிந்தது என்று நம் தமிழகத் தலைவர்களில் ஒருவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

நாட்டின் உயிர் நாடிகளான, தொடர்வண்டித் துறை, அஞ்சல் துறை, வானொலித் துறை, உயிர்முறிக் குழுமம், வைப்பகத் துறை ஆயத்துறை ஆகிய அனைத்துப் பெருந் துறைகளிலும் பார்ப்பனர்கள் அளவுக்கு மீறி நுழைக்கப்படுவது எப்படி என்பதைப் பொதுமை பேசி, ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் எல்லா அரசியல் தலைவர்களும், மற்ற இன மக்களுக்கு விளக்கியே ஆகவேண்டும். இந்நிலைகளால் ஏற்படும் பிற இன வீழ்ச்சி நிலைகளை மக்கள் விளங்கிக்கொண்டு கிளர்ந்தெழு முன், இவற்றில் ஓர் ஒப்புரவு நிலையினை உருவாக்கிக் கொள்வதே எல்லார்க்கும் நல்லது. இஃது ஒருபுறம் இருக்கட்டும். நாம் வானொலித்துறையின் உள்முக நடவடிக்கைகளைப் பற்றிச் சிறிது எண்ணுவோம்.

முதற்கண், நம் (தமிழ்) நாட்டு வானொலியில் தமிழ் மொழி சிதைக்கப் பெற்று, உயிர் வதை செய்யப் படுவதைப்போல், வேறு எந்த நாட்டு வானொலியிலும் நிகழ்வதில்லை, இலங்கை வானொலியும், சிங்கை, மலேசிய வானொலியும், இங்கிலாத்தின் பி. பி. சி. வானொலியும் தமிழ் மொழிக்குத் தரும் மதிப்பைப்போல், தமிழ்நாட்டு வானொலி தராததின் உள்நோக்கம், தமிழ்மொழியை இழிவு படுத்துவதாகத் தான் இருக்கமுடியும். தமிழ்நாட்டு மூன்று முகாமையான வானொலி நிலையங்களிலும், கடைப்பிடிக்கப் பெறும் தமிழ் நடை முறைகளைக் கீழ்வருமாறு வகுக்கலாம்.

1. தமிழ் என்றால் கலப்புத் தமிழ்தான்.
2. தமிழ் உரையாடல் என்றால் ஆரியப் பார்ப்பனர்கள் பேசும் அம்மாமி அத்திம்பேர் உரையாடல்தான்.
3. தமிழ் இசையென்றால், தியாகராயரின் தெலுங்கு இசைப் பாடல்களும். ஐயர், அய்யங்கார், சாமா, சாத்திரிகளின் கலப்புத் தமிழ்க் கத்தல்களுந்தாம்,
4. தமிழ் நாடகம் என்றால், ஆரிய இதிகாசப் புராணக்கதைகள், அல்லது பார்ப்பன வீடுகளில் நடைபெறும் (மகற்கொடை, மகட்கொடை, வரதக்கிணை), காதல் வாலாட்டக் கதைகள் தாம்.

5. அஃதாவது தமிழ்நாட்டின் இன, மொழி, பண்பாட்டுத் துறைகளின் உயர்ச்சியைக் காட்டவேண்டுமானால் அவற்றைப் பார்ப்பனச் சார்பாக்கிக் காட்டுவது. அவற்றின் தாழ்ச்சியைக் காட்ட வேண்டுமானால் அவற்றைச் சேரித் தமிழாக்கிக் காட்டுவது. அந்நிலைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

(அ) ஓர் உயர்ந்த குடும்பத்துப் பெண் இன்னொரு பெண்ணுடன் பேசுவதானால், "என்ன மாமி எப்படி இருக்கேள்! உங்க ஆத்து விவகாரமெல்லாம் நேக்கு நன்னாத் தெரியறது. அதைப்போலவே எங்க ஆத்து விவகாரத்தையும் சித்தே கேளுங்கோ"—என்று வரும்.

(ஆ) ஒரு தாழ்ந்த குடும்பத்துப் பெண் இன்னொரு பெண்ணுடன் பேசுவதானால். 'என்னாடி, இன்னான்னு, என்னெ நெனெச்சுக்கிட்டே!'—என்று சென்னைத் தமிழில் வரும்.

இவை யிரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு தமிழ்க் குடும்பம் இத்தமிழ் நாட்டில் இக்காலத்தில் இல்லை என்பதே இவ் வானொலிகளின் மதிப்பீடு. அவ்வாறு எப்பொழுதேனும் ஒரு கதையோ, நாடகமோ ஒலிபரப்பப் பெற்றால், அது வரலாற்றுக் கதையாகவோ, கழகக் காலத்துப் புலவர் வரும் நாடகமாகவோ தான் இருக்கும். அப்படியிருந்தாலும், அவற்றில் ஆரிய இன மேம்பாட்டை வலியுறுத்தும் அறவுரைகள், மதக் கருத்துகள், கடவுள் சார்பு நிலைகள் இவற்றைத் தாம் மிகுதியாகக் காணலாம். தமிழ்ப் பண்பாட்டையோ, தமிழர் தம் வரலாற்றுப் பெருமையையோ அவற்றில் கேட்க முடியாது.

6. திரைப்படப் பாடல்களோ வென்றால் கேட்கவேண்டியதில்லை. ஒன்று எந்தக் கட்சி பரவி வருகிறதோ, அல்லது பார்ப்பனீயத்திற்குச் சார்பாக விருக்கிறதோ, அந்தக் கட்சிக்குகந்த பாடல்களாகவே இருக்கும்.

இதற்கு எடுத்துக் காட்டுகள்.

(1) தமிழகத்தில் காமராசர் கட்சி வீழ்ந்து. தி. மு. க. எழுந்து, ஆட்சியை அமைத்தபொழுது, (அந்நிலையில் அவ்வினத்துக்குக் காமராசர் வேண்டாதவராகவும், தி.மு.க. வேண்டியதாகவும் இருந்ததால்) அதற்குச் சார்பான திரைப்படப் பாடல்களாகவே ஒலிபரப்பப் பெற்றதை அப்பொழுதையு வானொலி

யைக் கூர்ந்து கவனித்தவர்கள் நினைவில் வைத்திருக்கலாம்.

(2) அதன்பின்னர், நடந்த ஓரிரண்டு இடைத்தேர்தல்களில் தி.மு.க., அ.தி.மு.க., பேராயக் கட்சிகளுக்குள் நடந்த மும்முனைப் போட்டிகளில், அ.தி.மு.க. வெற்றிபெற்ற பின்; (அக்கால் தி. மு. க. வேண்டாததாக விருந்து, அ.தி.மு.க-வை அவ்வினம் வரவேற்றதால்) எம். சி. இரா-வின் எக்களிப்புப் பாடல்களாகவே ஒலிபரப்பியதையும் நினைவில் வைத்திருக்கலாம்.

7. இனி, எங்கேனும் ஓர் நேர்முக உரையாட்டை (அஃதாவது ஒரு கல்லூரி மாணவனையோ, மாணவியையோ, அல்லது, ஓர் அலுவலக எழுத்தரையோ, அதிகாரியையோ அல்லது, ஒரு குடும்பத் தலைவரையோ. குடும்பத் தலைவியையோ அல்லது, ஒரு கல்விக்கூட ஆசிரியரையோ, ஆசிரியையோ அல்லது, ஒரு பொதுநிலை மன்றப் பொறுப்பாளரையோ, விளையாட்டு வீரரையோ) — எவரைக் கண்டு பேசிய நேருரையாடல் (பேட்டி) என்றாலும், அதில் வருபவர்களெல்லாரும் பிராமண இனத்தைச் சார்ந்தவர்களாகவே தாம் இருப்பர். ஆனால் ஓர் உழவரையோ, கடைக்காரரையோ, வண்டியோட்டுபவரையோ, ஒரு தொழிலாளியையோ கண்டு நிகழ்த்திய உரையாடல் என்றால், அவர்கள்மட்டும் தமிழினத்தைச் சார்ந்தவராகவே இருப்பர். அஃதாவது அங்குள்ளவர்களுக்கு, உயர்ந்த நிலையில் உள்ள பெருமை மிக்க வாழ்வினத்தைப் பார்ப்பன இனமாகவும், தாழ்ந்த நிலையில் உள்ள சிறுமை மிக்க இனத்தைத் தமிழ் இனமாகவும் காட்ட வேண்டும் என்பதே நோக்கம். அஃதாவது, இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், ஒரு கல்லூரி மாணவனோ, ஆசிரியரோ, அதிகாரியோ தமிழராக இருக்கக்கூடாது; இருந்தாலும் பெருமையில்லை; என்பதும், உழைப்பாளிகளோ, தொழிலாளர்களோ எனின் பார்ப்பனர்களாக இருக்கக்கூடாது; தமிழர்களாகவே இருக்கவேண்டும் என்பதும் இந்த மூன்று வானொலி நிலையங்களிலும் வேலைசெய்யும் பார்ப்பன அதிகாரிகளின் உட்கருத்தாக இருக்கலாம் என்று தெரிய வருகிறது, இல்லெனில், மாணவரிலோ, ஆசிரியரிலோ, அலுவலர்களிலோ, குடும்பத்தவரிலோ தமிழர்களை ஏன் அவர்கள் தெரிந்தெடுத்துக் கண்டு, அவர்களுடன் உரையாடல்களை நிகழ்த்துவதில்லை? அல்லது, தொழிலாளர்களிலும், உடல் உழைப்பாளர்களி




அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்
மெச்சியுரை செய்ததனுல் மேலாமோ — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

## இலங்கைத் தமிழர் உரிமைப் போர்

ஆசிரியர் : **செம்பியன்**

வெளியீடு : **இலெனின் பதிப்பகம்,**
பி/1, முதல் தெரு, சீத்தம்மா குடியிருப்பு,
ஆள்வார்பேட்டை, சென்னை-600018.

**விலை உருபா: 5—00.**

நாலா பக்கங்களிலும் ஒடுக்கப்பட்டும், நசுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் வருகின்ற ஒரு தனிப்பெரும் நாட்டினத்தின் அவல நிலை,

லும் பார்ப்பனர்களே இல்லையா ? இரண்டு நிலைகளிலும் இரு திறத்தாரும் இருக்க, ஒரு நிலைக்கு ஓரினத்தையே உரிமையாக்கிக் காட்டுவதன் நோக்கம், இந்நாட்டில் இன்னும் அந்தப் பாரப்பனீய நோக்கம் வீழ்ந்துபடவில்லை என்பதையே காட்டுகின்றதா. இல்லையா ? இதனை இங்குள்ள உழைப்பாளிகளுக்காகவும், தொழிலாளிகளுக்காகவும் பரிந்து பேசும் பொதுவுடைமைக் கொள்கையர் கூர்ந்து கவனிக்கக் கேட்டுக் கொள்கின்ரேும். அவர்களின் முதலாளியக் கோட்பாட்டேக்குத் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அல்லது இந்தியாவைப் பொறுத்தமட்டில் மிகப் பொருத்தமாக இருப்பது பார்ப்பனீயமே என்பதை அவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளும்வரை, இந்நாட்டில் பொதுவுடைமை காலூன்ற இடமே கிடைக்காது என்பதை இங்குள்ள கருங்கற் பாறைகளிலெல்லாம் பொறித்துக் கொள்ளலாம்.

—(தொடரும்)

பெருஞ்சித்திரன்.

ஓர் உண்மையான மார்க்சியக்காரனின் கண்களில் எப்படிப்படும்—படுகின்றது என்பதை இயம்பி நிற்பதே இந்நூல்.

நூலாசிரியர் திரு. செம்பியன், தாம் யார் என்பதையும், தம் வழியும் இலக்கும் எஃது என்பதையும் முன்னுரையிலேயே தெளிவாக்கிச் செல்கிறார்.

“இலங்கைத் தமிழரின் இன்னல்கள், சிங்கள முதலாளியத்தின் ஆட்சி ஆகியவற்றை ஓரளவு நுணுகிக் கண்டதன் விளைவே இந்த நூல் இதன் சாறு, எந்நாட்டிலும் இனம், மொழி, மதப்பெயர்களால் முதலாளிய-முற்றுளுமையின் நச்சுக் கால்கள் இம்மியும் இடம் பெறக் கூடாதென்பதே இவ்வரிகள் நூல்பற்றிய ஒரு தெளிந்த கண்ணோட்டத்தைத் தோற்றுவித்து விடுகின்றன.

இந்நூல், 'உரிமை வேட்கை' என்ற கிழமை இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு. இஃது ஐந்து தலைப்புகளில் கருத்துகளைப் பகிர்ந்தளிக்கிறது. அவை: 1. நாடு தோறும் நாட்டினங்களின் விடுதலை? இளந் தமிழரிடையே இலெனின் எங்கே? 2. இலங்கைத் தமிழர் உரிமைப் போர். 3. இலங்கை இளந்தமிழர் உணர வேண்டாமா? 4. தமிழ்த் தேயம் உருவாகட்டும். 5. பிற் சேர்க்கை என்பன.

இவற்றுள். முதல் தலைப்பை இரு கேள்விகளாய் ஆக்கி, அவ்விரு கேள்விகளின் உள், தமிழர் தனி 'நாட்டினத்தார்' என்பதையும், அவர் விடுதலை பெறுவது உலக நயன்மை பொருந்தியது என்பதையும், இன்றியமையாத தென்பதையும், உள்ளீடாக வைத்திருக்கிறார்.

இம் முதல் தலைப்பின் கீழ், பல செய்திகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆசிரியர் விளக்கியுள்ளார். தேவையான இடங்களிலெல்லாம், இலெனின் கூற்றுக்களைப் பொருத்தமான மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

அடுத்து. 'இலங்கைத் தமிழர் உரிமைப்போர்' என்ற இரண்டாந் தலைப்பின் கீழ், இலங்கை, அங்கு வாழும் தமிழர்க்கு உரிமையானதே என்பதை அறிவியலாளரின் நில நூல் துணையுடன் முதற்கண் மெய்ப்பிக்கிறார்.

அத்துடன், தமிழகத் தமிழரின் எதும் அறியாமை முதலிய பல செய்திகளை, வாய்மூடிக் கண்மூடிக் கிடக்கும் தமிழகத் தமிழர் உணர்வில் சூடேறும் என நம்பும்படி ஆசிரியர் எடுத்துரைத்திருக்கிறார்.

நூல் முழுவதுமே தெளிவான புள்ளி விளத்தங்களைத் தாங்கி நிற்கிறது. மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் பொய்த் தகவல்கள்,

அரசுடைமைக் காடுகள் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகள், குற்றம் சாட்டப்பெற்ற தமிழர்பற்றிய விளத்தங்கள், இந்திய இலங்கை வாணிகம், சீனம் இலங்கை வாணிகம்பற்றி விளத்தங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன. திருகோண மலைத் துறைமுகம் பற்றிய விளத்தங்கள். பல புலனங்களைத் தெளிவாக்குவனவாயுள்ளன.

அடுத்து, 'இலங்கை இளந்தமிழர் உணரவேண்டாமா?' என்ற பகுதி ஆசிரியரை நன்கு படம் பிடித்துக் காட்டுவதாய் உள்ளது.

ஆசிரியர் துணிவுடன் ஓர் இலக்கையும் ஒரு பாதையையும் சுட்டிக் காட்டுகிறார். உதைத்த கால்களுக்கெல்லாம் ஒத்தடம் கொடுத்தே பழகிப்போய்விட்ட நமக்கு, பாலத்தீனியரின் மறவுணர்வு வருமா? பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்.

ஐந்தாம் பகுதி பிற்சேர்க்கை. இதில் உள்ள மூன்று பிரிவுகளுள், இலங்கைத் தமிழர் தங்கள் அவல நிலையை "ஒன்றிப்பு நாடுகள் அவையில்" (U. N. O.) முறையிட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, உலக அறமன்றக் குழு (International Commission of Jurists). அவர்தம் உரிமைகளும் நலன்களும் எவ்வெவ்வகையிற் பறிக்கப்படு கின்றன என்பதை அறியவேண்டி, தமிழர் ஒன்றிய முன்னணித் தலைவர் செல்வநாயகம் அவர்களுக்கு எழுதிய மடலும், ஈழத் தமிழர் தலைவர் தருமலிங்கத்துடன் நூலாசிரியர் நிகழ்த்திய கலந்துரையாடலும் முகாமையானவை.

அடுத்து, நூலின் மொழி நடையைப் பொறுத்தவரை, பெருமைப் படத்தக்க வகையில் அஃதில்லை என்பது வருந்தத்தக்க உண்மைதான். வடமொழி முதலிய பிறமொழிகளின் சொல்லாட்சி அளவிறந்து காணப்படுகிறது. 'ஏகாதிபத்யம், பூர்ஷவா, ஏகபோகம், வர்க்கம்' என்னும்படியான சொற்களே ஏழை மக்களிடம் பொதுவுடைமையைச் சரியாக அண்ட முடியாமல் செய்துவிட்டது என்பது ஆசிரியரால் அறியப் படாததாகவா இருக்கும்?

இருப்பினும், நூலின் வலுத்த செய்திகளும் உயர்ந்த இலக்கும் நூலின் இத்தகு குறைபாட்டை மிகுதியாய்ப் பொருட்படுத்துவதைத் தடுத்து விடுகின்றன. அடுத்த பதிப்பிலாகினும் மொழிநடை தூய்மைப் படுமானால் மிகவும் மகிழலாம்.

இந்நூலை மானமுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். பிறரையும் படிக்கத் தூண்டவேண்டும். இஃது ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டு, உலகின் பார்வைக்குச் செல்வதுகூட நன்மை தரத்தக்கது என்றே தோன்றுகிறது. ஆசிரியரின் உழைப்பு, இத்துறையில் தொடர்ந்து வேண்டப்படுகிறது என்பதைக் கூறவேண்டுவதில்லை.

— இரணியன்



# நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(சுவடி 12 : ஓலை 8-இல் வெளிவந்த
பாட்டு 38-இன் தொடர்ச்சி.)

களிகொள் ஒதுக்கம் : களிப்பு நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒதுக்குப் புறங்கள். நகர்ப்புறங்கள் கட்டிடங்களாலும் போக்குவரத்துகளாலும் நெரிசல்கள் மிகுந்து நிற்குமாகலின், பொழுதுபோக்குக்காக நடத்தப்பெறும் களிப்பு நிகழ்ச்சிகளைக் கொண்ட கொட்டகைகளும், கூடாரங்களும் ஒதுக்கமாயுள்ள வெற்று வெளிகளில் அமைக்கப் பெறுவதால், அவை 'களிகொள் ஒதுக்கம்' ஆயிற்று.

கலி ஆவ்ணம் : ஆரவாரமிக்க கடைத்தெரு.

கலித்தல்—நிறைதல், மிகுதல், தழைத்தல். கல்—ஓசையைக் குறிக்கும் ஓர் ஒப்பொலிச் சொல். அதனின்று கலிங் கலிங், கலகல முதலிய பல ஓசைச்சொற்கள் பிறக்கும். ஓர் ஒழுங்கின்றிக் கலப்பு மிகுந்த ஓர் ஒலித்தொகுதியைக் குறிக்கின்ற பொழுது, கலி என்று மட்டில் நின்று பொருள் தரும்.

ஆவணம் — நுகர்ச்சிப்பொருள்கள் நிறைந்த இடவரிசை என்று பொருள் தரும் சொல். ஆ—நுகர் பொருள். அணம் வரிசைப்பொருள் தரும் ஒரு பெயர்ச் சொல்லீறு. பொட்டணம், கட்டணம் என்பவற்றில் நோக்குக. வரிசை—முறை—ஒழுங்கு—ஒரு பொருள் பல சொற்கள்.

விலை கூய்ப் ...போலி மகளிர் : கூய், புணர்ந்து, வித்தும் என்னும் எச்ச வினைச்சொற்கள் போலி மகளிரைச் சார்வதால், அவரின் வினையாளுமை உணர்தல் பாலது. பொலிவுடல்—அழகுமிக்க உடல். இனி, புணர்ச்சிக்கே உரிய உடல் என்றும் பொருள்படும். பொலிவு—புணர்ச்சி. மகளிர் என்னுஞ் சொல் பொதுவில் சிறந்த பெண்டிரைக் குறித்தாலும், சிறப்பில் மணமாகிய பெண்டிரையே—மனைவியரையே—குறிக்கும் உயர்ந்த சொல். போலி மகளிர் என்னுமிடத்து, மனைவியர்போல் உரிமையாட்டுக்குரிய பெண்டிர் என்றும் சிறப்புப் பொருள் தரும்.

புறம் புனை......புரை நாகரிகம் : வெளிப்புறப் பார்வைக்குச் சிறப்பாகவும் மயக்கந் தருமாறும் விளங்கி உள்ளே பயன் ஒன்றுமில்லாத நாகரிகம். புரை—உள்ளீடற்ற தொளை.

நாகரிகம்—நகர வொழுக்கம். புற நடை மாறுபாடு.

அறம் பிறழ் வினைகள் : நெறி முறைகள் மாறுபட்ட செயல்கள்.

அறம்—ஆறு (வகுமுறை, நெறிமுறை, ஒழுக்க முறை) என்னும் அடியாகப் பிறந்த சொல். அகத்தானும் புறத்தானும் சான்றோர் களால் வகுக்கப்பெற்ற ஒழுகலாறு. கடைப்பிடி.

அலவே சிறந்தன : இவை அல்லவே சிறந்தன.

ஓவத் தெரு முதல் அறம் பிறழ் வினைகள் ஈறுக நகரக்காட்சிகளை யும், மாட்சிகளையும் கூறிவந்த தந்தையார், தம் மகன் அவற்றின் அழகிலும், புனைவிலும், நடையிலும், உள்ளமும் உடலும் பறி கொடுத்துத் தன் கல்வியைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என் கின்ற குறிப்புத்தோன்ற, 'மகனே ! இவையல்ல சிறந்தன' என்பார்.

சிறந்தன அல்லவே என்னும் உரை மரபை மாற்றி, 'அல்லவே சிறந்தன' என்று உறுதிப்பொருள் தோன்றவும், 'நீ கவனிக்க வேண்டிய, சிறந்த பொருள் வேறொன்று உண்டு' அஃது இசைபெறு கல்வி—என்னும் குறிப்புப் பொருள் தோன்றவும் கூறினர் என்க.

இசை பெறு கல்வி : புகழைப் பெறுவிக்கின்ற கல்வி 'இது காறும் கூறியவை கடலில் உள்ள சுழல்கள் போலும் நகரில் உள்ள சூழல்கள். இனிமேற்றான், நீ அங்குப்போய் எந்த நோக்கத்துடன் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லப் புகுகின்றேன்' என்று கூறியவர் கல்வி கற்கவேண்டும் என்றுகூட நேரிடையாகச் சொல் லாமல், 'புகழைத் தருகின்ற கல்வியைத்தான் நீ கற்கவேண்டும் ; ஆனால் அதைவிட உயர்ந்த ஒழுக்கத்தை நீ எப்பொழுதும் கைவிடல் கூடாது' என்று இரண்டையும் இணைத்துப்பேசுவதுடன், கல்வியை விட ஒழுக்கத்தை உயர்வு படுத்தியும் பேசுகின்றார்.

''புகழ்பெற வைப்பது கல்வி என்றாலும் அந்தப் புகழைத் தாங்குவதற்கு உடல் வேண்டும் ; அந்த உடலில் உயிர் வேண்டும். அந்த உடலும் உயிரும் இணைந்து இயங்கித்தான் புகழாகிய கல்வி யைத் தாங்குதல் வேண்டும். நலமில்லாத உடல், அல்லது உயிரில் லாத உடல் கல்வியைப் பெற்றுப் பயன் என்னையோ, ஆகலின் உடலும் உயிரும் ஒருமிக்க நலத்துடன் இயங்கவேண்டும் ; அதற்கு ஒழுக்கம் வேண்டும். ஒழுக்கமில்லாத உடல் உயிரில்லாத உடம்பு. ஒழுக்கத்தை உயிர் என்று சான்றோர் கூறியது இதன் பொருட்டே ஆகும். எனவே, புகழ் தருகின்ற கல்வி கற்பதற்காகச் செல்கின்ற நீ, அதனை மட்டும் நினைந்து கொண்டிராமல், ஒழுக்கம் அதனினும்

உயர்ந்தது, ஏர்ந்தது, சிறந்தது என்றும் நினைந்துகொண்டிருக்க வேண்டும்'' — என்று விளக்கச் சுருக்கமாகத் தன் மகனிடம் கூற விரும்பியவர், 'இசைபெறு கல்வியின் ஏர்ந்தன்று ஒழுங்கே' என்று கூறுகின்றார். ஏர்ந்தன்று—ஏர்ந்தது. ஏர்தல்—உயர்தல்.

வசைபெறு வாழ்வின் மாய்கை நன்றே : வசைபெற வாழ்வதைவிட மாய்ந்து போவது நல்லது.

"இசை தருவது கல்வி ; வசை வராமல் காப்பது ஒழுக்கம். இசை பெறுவதைவிட வசை வராமற் காக்கும் ஒழுக்க வாழ்க்கையே ஒருவர்க்கு வேண்டும். அவ்வாறு இன்றி, வசை பெறும்படி ஒருவன் ஒழுக்கத்தைக் கைவிட்டு விட்டு, வாழ்வதைவிட அவன் மாய்ந்து போவது நல்லது ; நீயும் இசைபெறும் கல்வியுடன் திரும்பி வருவதைவிட வசை தராத ஒழுக்கத்துடன் வருவதைத்தான் நான் மிகுதியும் விரும்புகின்றேன். அவ்வாறு ஒருவேலை ஒழுக்கமுடன் திரும்பி வராத சூழ்நிலை உனக்கு வருமானல் இங்கு வராமல் அங்கேயே மாய்ந்து போதல் நல்லது''—என்று உறுதிப்படப் பேசினர் என்க.

தசை பெறல் அன்றே வாழ்க்கை : உடலுக்கு ஊன் அமையப்பெறுதலன்று வாழ்க்கை.

தசையுடன்......சிறப்பென்றுரே ! : உடல், தசை வரப்பெறுதலன்று வாழ்க்கை என்றவர், மீண்டும் தசையுடன்....என்று தொடங்குவதால் நல்ல உடலும் வேண்டும் என்ருர். ஆனல் அந்த நல்ல உடலுடன் அறிவும் உள்ள உணர்வும் வேண்டும் என்ருர். இனி, அவற்றுடன், அவையெல்லாவற்றையும் ஒளிபெறச் செய்யும் உண்மையும் வேண்டும் என்ருர். இவையனைத்தும் நிறைந்து நிற்கும் உடல்தான் நல்லுடல் என்றும், அவ்வுடலைத் தாங்கும் உயிர்தான் நல்லுயிர் என்றும், அதுதான் அவ்வுடலைப் பெற்ற அவ்வுயிர்க்குச் சிறப்பு என்றும் கூறுகின்ருர் என்க.

இனி, உயிருண்மையும், உயிர்த் தன்மையும் உயிரியக்க முறையும், அவ்வுயிர் உலகொடு பொருந்தி உடலெடுக்கும் பான்மையும், எம் உலகியல் நூறின், மெய்யதிகாரத்தில் கண்டு தெளிக.

உண்கையும்.. ....கல்வி : உண்பனவற்றையும், உடுப்பனவற்றையும் வாழ்க்கைக்குற்ற பிற பொருள்களையும் பெறுகின்ற வழிமுறைகளைக் கற்றுக் கொள்வதற்கன்று, கல்வி,

இப்பாட்டின் கருப்பொருளே இவ், விறுதி மூன்றடிகளில்தான் அடங்கியுள்ளது.

"கல்வி என்பது உண்பதற்கும் உடுப்பதற்கும் வாழ்வதற்கும் உரிய பொருள்களைப் பெறுவதற்குரிய அறிவு — என்று கூறும் பொருளியல் கருத்தினரை மறுத்துக் கூறியதாகும் இக்கூற்று. அவற்றைக் கற்பது கல்வியாகாது. அது தெரிந்துகொள்ளுதல் learning என்பதே ஆகும். கல்வி என்பது வேறு. தெரிந்துகொள்ளுதல் வேறு.

ஆங்கிலத்தில் கல்வி என்பதற்குரிய நேரிய சொல் Education என்பது. Education என்பதற்கு developement of character or mental Power என்பதே பொருள்.

எனவே, Education (கல்வி என்பது) வேறு; Learning (தெரிந்து கொள்ளுதல் என்பது) வேறு.

கல்வி என்னும் தூய தமிழ்ச்சொல் தோண்டுதல் என்று பொருள்படும் உயர்ந்த சொல்.

இதற்குரிய 'வித்துவம்' என்னும் வித் (Vid) என்னும் சொல்லடியாகப் பிறந்த வடசொல்கூடத் தெரிந்துகொள்ளுதல் என்னும் பொருளினதே. Vid - to Know. இதிலிருந்துதான் தெரிந்து கொள்ளுதல் என்று பொருள்படும். வித்தை, வேதம்—முதலிய வடசொற்கள் தோன்றும். Vid-என்னும் வடசொற்குரிய தமிழ் மூலமும் விழி என்பதே. Know என்னும் கிரேக்கச் சொல்லுக்குரிய தமிழ் மூலமும் 'காண்' என்பது. கண்டு அறிவதே Knowing என்பது. புறநிலையறிவு அது, (பாவாணரின் வடமொழி வரலாறு காண்க.)

ஆனால், கல்வி அஃதன்று.

மனத்தின் அடியில் புதைந்து கிடக்கின்ற கருத்துகள், நிலத்துள் புதைந்து கிடக்கும் செல்வங்களைப்போல் விலைமதிப்பற்றவை ஆகும். அவற்றை அகழ்ந்து அறிந்து கொள்வதே கல்வியாகும்.

'எனவே, வெறும் உலகியல் தெரிவுகளை மட்டும் தெரிந்து கொள்வதைக் கல்வி என்று நினையாதே.' என்று கூறுகின்றவர், கல்வியென்பதற்குரிய உண்மைப் பொருளை அடுத்துவரும் அடியால் விளக்குகின்றவர், அது,

முட்டறப் பொருந்திய உட்புலன் முனைப்பு — என்கின்றார். முட்டற-தடைகள் அற. பொருந்திய -ஏற்கனவே உயிரின் துய்ப்பினால் வந்து பொருந்தியுள்ள. உட்புலன் - அகவறிவுப் புலன். முனைப்பு-அதன் முனைந்து நிற்கும் தன்மைகளாகும்.

உயிரின் துய்த்தல் நுகர்வால் பெறும் உண்மையறிவை உணர்ந்து கொள்வதே கல்வியாகும் என்னும் விளக்கத்தையும் பிற அறிவு நிலைகளையும், எம் உலகியல் நூறின் வாழ்வதிகாரத்தில் கண்டு தெளிக.

இனி, அறிவமை கழகத்து அன்றன்றும் நெறிமுறைகளைப் பயின்று கொள்ளும் பொருட்டு எம்மைப் பிரிதலுறும் மகனே! உண்கையும் உடுக்கையும் உறுபொருள் பெறுகையும் கற்றுக் கொள்வதன்று கல்வி; அது, நம் உயிரியக்கத் தடைகள் நீங்கும்படி, முன்னரே வந்து பொருந்திய உட்புலனறிவுகளைக் கண்டு கொள்வதற்கும், அவற்றினின்று மேலும் மேலும் அகழ்ந்து உண்மைகளை அறிவதற்கும் உரிய ஓர் உணர்வு முனைப்பைப் பெறுதற்கான ஓர் உத்தி என்று கண்டு கொள்க' என்று தந்தை தன் மகனுக்கு அறிவுறுத்துவதாகும் இப் பாட்டு.

இது, பொதுவியல் என் திணையும், பொருண் மொழிக்காஞ்சி என் துறையுமாகும்.

---

பாட்டு ௯௧.

வடுவின் றெடுத்த மார்பி னேனே
நெடுவின் றிமிலிய தோளி னேனே
குழலென் சுரிந்த குஞ்சியும் பரந்த
ஒளிவார் நெற்றியும் வளிவார்ந் தெழுந்த
கொழுவின் கூரிய மூக்குமன் னேனே
அருளுமிழ் கண்ணே டணைந்தடி வடிந்த
சுரிமயிர் தடவிய விரிசெவி யோனே
அரியிதழ் வாயின் அடுக்கிய நகையும்
மலையிழிந் திறங்கிய கலைபுண ரருவி
அலையெனப் புடைத்த அருட்கையு மாகி
மயர்வறப் பொலிந்த மல்லல் மேனியோற்
குயிர்கொல் நெஞ்சம் எவன்குடி கொண்டதே!

பொழிப்பு:

குற்றமில்லாமல் உயர்ந்து விளங்கும் மார்பினன்; நீண்டு புடைத்தெழுந்த தோளினன்; குழல்போலும் சுருண்ட தலைமயிரும், அகன்று, ஒளி ஒழுகும் நெற்றியும், ஒழுங்குபட்ட உயிர்ப்பை உடையதால், எடுத்து நின்ற, கொழுமுனையைப் போலும் கூர்மையுடைய மூக்கும் வாய்க்கப் பெற்றவன்; வேற்றுமையற்று அன்பைப்

பொழிகின்ற கண்களை அணைந்து, அடிநோக்கி அழகுற அமைந்தது, குறுஞ் சுருள் மயிர் தடவிக் கொண்டுள்ளதுமாகிய விரிந்த செவியினன் ; பருக்கைக் கல்போலும் இதழ்களையுடைய வாயில் வரிசையுற அமைந்த பற்களும், மலையினின்று தவழ்ந்து விழும் கலையுணர்வைத் தோற்றுவிக்கும் அருவியின் அலைகள் போலும் புடைத்து நின்ற அருள் தோய்ந்த கைகளும் உடையவனாகி, மாறு பாடு அற்ற வகையில் அழகுற விளங்கும் வளப்பம் மிகுந்த மேனியோன் இவனுக்கு என் உயிரைக் கொல்லுகின்ற நெஞ்சம் மட்டும் எங்ஙனம் குடிகொண்டதோ !

விரிப்பு :

இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

தன்னை விரும்பாத தலைவனுடைய காதலுக்கு ஏங்கிய தலைவி யொருத்தி, அவன் உடலழகை வியந்து உள்ளத்தைக்கடிந்து கூறிய தாகும் இப்பாட்டு.

ஓவிய அமைப்புக்கு மாறுபாடுருதவகையில் அமைந்த உயர்ந்து பரந்த மார்பும், நீண்டு பருத்த தோளும், சுருண்ட அழகிய தலைமயிரும், அகன்று ஒளி பொருந்திய நெற்றியும், எடுத்து நின்ற கூரிய மூக்கும், அருள் பொழியும கண்களும், அழகுற வடிந்து வீழ்ந்த செவிகளும், பருத்து ஒளிசார்ந்த இதழ்களும், வரிசையுற அமைந்த பற்களும், வீழ்ந்த நெடிய கைகளும் கொண்டு விளங்கும் அவனுக் குத் தன்னை விரும்பாததும் தன்னுயிரைக் கொல்லுகின்றதுமாகிய நெஞ்சு எப்படி அமைந்ததோ என்று ஏக்கமும் வெறுப்பும் கடுமையும் தோன்றக் கூறினாள் என்க.

வடுவின்று — மாசு மறுவில்லாமல்.

ஆடவன் ஒருவனின் மார்பே காதல் உணர்வு கொண்ட பெண்களை முதலிற் கவர வல்லதாகையின் முதற்கண் மார்பைக் கூறினாள் என்க.

எடுத்த மார்பு : உயர்ந்த மார்பு பரந்து நிற்பதால் பரப்பும் உணர்தலாயிற்று.

மார்பினோன் : மார்பை உடையவன்.

நெடுவின் திமிலிய தோளினன் : நீண்டு திமில்போலும் புடைத்து நின்ற தோள்களையுடையவன்.

தழுவலுக்குரியன தோள்களாதலின் அவற்றின் எடுப்பை அடுத்துக்கூறினாள் என்க.

திமில் என்னும் பெயரடியாகப் பிறந்த வினைச்சொல் திமிலிய.

குழல் என் சுரிந்த : குழல் போலும் சுருண்ட.

குஞ்சி : ஆண்களின் தலை மயிர்.

பரந்த ஒளிவார் நெற்றி : அகன்று ஒளி சிந்தும் நெற்றி.

அகன்று ஒளி பொருந்திய நெற்றி அறிவுணர்வுக்கு அடையாளமாகலின் அதனை வியந்தாள் என்றபடி.

வளி வார்தல் : காற்று ஒழுங்குபட இயங்குதல்.

மூச்சுக்காற்று ஒழுங்குபட இடங்குதல் உடல் நலமுள்ளவர்க்கே அமையுமாகலின், அவனின் நலம் பொருந்திய உடலை நயந்தாள் என்க. மூச்சுக் காற்று ஒழுங்குபட இயங்கியதை அறிய ஏதுவாய் நின்றது அவனது எடுத்து நின்று கூரிதாய் விளங்கும் மூக்கு. ஆகலின் அதன் வழி அவன் மூச்சியக்கமும், அதன் வழி அவன் உடல் நலமும் கண்டு கொள்ளப்பட்டன.

கொழு — ஏர்க்கொழு. மூக்குக்கு ஏர்க்கொழுவை உவமித்தது அதன் முப்பட்டை உருவமும் கூர்மையும் பற்றி.

மூக்கும் மன்னேன் : மூக்கும் பொருந்தியவன். மன்னுதல்— பொருந்தியிருத்தல்.

அருளுமிழ் கண் : உயிர்களிடத்து வேற்றுமையின்றி அன்புப் பார்வை வீசும் கண்கள்.

அத்தகையவன் என்மேல் அப்பார்வையை வீசினுல் என்ன என்று ஏக்கம் புலப்படப் புலந்த உணர்வுடன் கூறினுள் என்க.

கண்ணேடு அணைந்து அடிவடிந்து சுரிமயிர் தடவிய விரிசெவி : கண்களின் புற ஓரத்தொடு இணைந்து நின்று, அடிப்பகுதி நீள இறக்கியவாறு, காதுட்புறம் சுருண்ட மயிர் தடவிக் கொண்டிருக்க விரிந்துள்ள செவிகள்.

செவிகளை இவ்வாறு நீள வண்ணித்தது, தன் காதல் மொழிகளைக் கேளாத அவற்றிற்கு இத்துணை அழகோ, எனப் புலந்து ஏங்கியது. தன் மொழி கேளாக்காதுகள் விரிந்து நின்று என் பயன் என்று வெறுத்ததுமாம்.

அரியிதழ் : பருக்கைக் கல் போலும் பருத்து செவ்விய மெல்லொளி படர்ந்த இதழ்.

நீரான் உருட்டப் பெற்று, அதன் மேற்புறத்துச் சொர சொரப்பாய பகுதிகள் அரிக்கப்பெற்று, உருண்டு திரண்டதால் பருக்கைக் கல் அரியென்னும் பெயரினதாயிற்று. இனி, அரி என்பது, அழகு என்றும் செவ்வரி என்றும் பொருள் பெற்று, அழகிய, சிவந்த கோடுகள் சார்ந்த இதழ் என்றும் பொருள் தருமாம். ஆயினும் உருவும் ஒளியும் நோக்க முன்பொருளே பொருத்தமும், பின் பொருளை அளவியதும் ஆகும் என்க.

அடுக்கிய நகை : வரிசையுற அடுக்கப் பெற்றுற் போலும் எயிறு.

நகை—ஆகு பெயராய் இடத்தைக் குறித்து, எயிறு என்னும் பொருள் பெற்றது.

இனி, எயிறு என்பது தோன்று நின்று, நகை என்பதைப் புன்னகை யவிழ்க்கும் வாய் என்றலும் ஆம்.

மலை யிழிந்து இறங்கிய : மலையினின்று நழுவி இறங்கிய.

கலைபுணர் அருவி : கலையுணர்ச்சியைப் புணர்த்துவிக்கும் அருவி.

அருவி அலை எனப் புடைத்த : அருவி நீரின் அலைகள் எனப் பருத்து நின்ற. கடல் அலை மிகவும் புடைப்பு உடையதாகலின் அலை உவமமாயிற்று.

அருட் கை : அருள்கின்ற கை,

'அருள்கின்ற கை என் பொருட்டு அருளாத தென்னையோ' என்று ஏக்கமும் எரியும் தோன்றக் குறித்தாள் என்க.

பெண் ஒருத்திக்குக் கை அருளுதல் அணைத்தல் ஆம்.

மயர்வு அற : வேற்றுமை அற்றவாறு.

உருவ அமைப்புக்கு மாறுபடாதபடி.

பொலிந்த : அழகுற விளங்கிய.

மல்லல் மேனி : வளப்பமும் வலிமையும் உடைய உடல்.

'உடல்' என்னாது மேனி என்றது உயிருள்ள உடலாகையான். உயிர்மேன் நின்றது மேனி. இனி, மேனி என்பது சிறப்பாக உடலின் மேற் பொலிவையும் குறிக்கும்.

உயிர் கொல் நெஞ்சம் : உயிரைக் கொல்லுகின்ற நெஞ்சம்.

தன் காதலை ஏற்காத நெஞ்சு. தன் உயிரைக்கொன்று உடலைப் பிணமாக்கும் நெஞ்சாதலின் உயிர் கொல் நெஞ்சு என்றாள்.

எவன் குடி கொண்டதே !: எவ்வாறு குடிகொண்டதோ. அறிகிலேனே என்றபடி.

இத்துணை அழகிய உடல் நலம் வாய்த்தவனுக்கு என்னை விரும்பும் நெஞ்சு வாய்க்கவில்லையே என்று ஏங்கினாள் என்க.

"உடலழகுக் கேற்றவாறு உள்ளழகு வாயாத நெஞ்சம் ஆகலின், அதனை அவன் விரும்பிக் குடிவைத்துக் கொண்டதாக இருத்தல் இயலாது; அதுதானே வந்து குடியேறி இருத்தல்வேண்டும்" என்னும் கருத்துத் தோன்றக் குடி கொண்டது என்றாள் என்க.

எவன் : என்னுஞ் சொல் எங்கிருந்து என்று இடப்பொருள் தோன்றவும் பொருள்படும்.

பெண்மை நயக்கும் ஆண்மைச் சிறப்பைக் குறித்ததாகும் இப்பாடல்.

இது, பாடாண் திணையும், பெருந்திணை என் துறையுமாம்.

[தொடரும்.]

# அறுவடை செய்கிறார்கள் !

அறுவடை செய்கிறார்கள் !—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

திருவடை யாமலே திண்ணையில் வீதியில்
தெருவோரச் சாய்க்கடை புழக்கடை நடுவினில்
எருவடை குழிகளில் ஈக்களாய், புழுக்களாய்
இறக்காமல் மொய்க்கின்ற ஏழ்மையைச் சொல்லியே,
அறுவடை செய்கிறார்கள்—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

மாருக்குத் துணியின்றி வாடிடும் பெண்டிர் !
மானத்தைக் காவாத வெறுமேனித் தோல்கள் !-
பேருக்கு உழைப்பதாய்ப் பேசியே தங்கள்
பிழைப்புக்கு வழிதேடும் பெரும்பெருந் தலைகள்,
அறுவடை செய்கிறார்கள்—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

ஊருக்கே இராப்பகல் உழைப்பதாய்ச் சொல்லி
உண்மைக்குப் பூட்டிட்டே உயர்மாடி கட்டித்
தூருக்குத் தோண்டியாய் உதவுவோம் என்றே
தொண்டைக்கு மருந்திட்டு மாநாடு கூட்டி,
அறுவடை செய்கிறார்கள்—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

கந்தைக்கு மாற்றில்லை ! கடுக்கின்ற வயிறு !
காற்றுக்குத் தடையில்லை ; கருஞ்சுவர்க் குடிசை !
மந்தைக்கு நிகரான மக்கட்செல் வங்கள் !
மற்று, அவர் பெயர்சொல்லிக் கொழுக்கின்ற நாய்கள்,
அறுவடை செய்கிறார்கள் !—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

கட்சிகள் தலைவர்கள் பெயர்சொல்லிச் சொல்லிக்
கண்ணீரும் இருசொட்டு வழிவதாய்த் துடைத்து,
மெச்சிடும் திட்டங்கள் பலதீட்டி னாலும்
மீளாத ஏழ்மைக்கு மெப்பாகப் பேசி,
அறுவடை செய்கிறார்கள் !—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

உழைப்பாளர் தொழிலாளர்க் குழைக்கின்றோம் என்றே
ஒருகோடித் தலைவர்கள் கத்தினார் நன்றே !
பிழைப்பவர் அவர்களா, இவர்களா ?—கண்டோம் !
பீற்றலும் கந்தலும் அற்றதா ? பேச்சில் ;
அறுவடை செய்கிறார்கள் !—இங்கே
அறுவடை செய்கிறார்கள் !

நம் நாட்டின் வளர்ச்சி நிலைகளைப் பற்றித்
தெரிந்துகொள்ள, நாளிதழ்களைப் புரட்டினேம்.........!

## ......படிக்கும்பொழுது

மண்டையிலடித்துக் கொள்ள
வேண்டும் போல் இருந்தது..........!

# உங்களுக்கும் அப்படி

ஒரு 'புதிய பாணித் திரைப்பட' விளம்பரம்!

ஒரு திரைப்பட விளம்பரத்திற்கு இவ்வளவு அறிவையா வீணடிப்பது ?

'சிங்கார'ச் சென்னையில்–சிலம்பொலித்த மதுரையில்
மலைக்கோட்டை திருச்சியில் – மாங்கனிச் சேலத்தில்
நஞ்சை சூழ் தஞ்சையில் – பஞ்சு நகர் கோவையில்
பரணி சூழ் நெல்லையில் – அரவிந்தர் புதுவையில்

மட்டுமின்றி

எங்கெல்லாம் திரையிடப் பட்டுள்ளதோ
அங்கெல்லாம் வெற்றி முழக்கமிடுகிறது!

ஒரு பழைய பாணித் திரைப்பட விளம்பரம்!

தெய்வத்துக்கும் விளம்பரம் தேவை தானு ? அட, தெய்வமே !

'கந்தா' 'கந்தா' என்று வேண்டினுல்
'இந்தா' 'இந்தா' என்று கொடுக்கும்
தெய்வம் முருகன் என்பதை உணர்த்தும் கதை!
காவல் காத்து, கல்லுடைத்து,
கைவண்டி இழுத்து, முருகனையே நம்பி
முன்னுக்கு வந்த ஒரு 'பக்தனி'ன் கதை!

ஓர் அரசியல் பாணி விளம்பரம்!

உண்மையாகவே தெரியவில்லை ! 'கோபுரத்துக் கலசம்' என்ருல் என்ன ?

புதுயுகத்தின் விடி விளக்காம்......தின்
எழுச்சி மிகு மாநில மாநாடு!
கொள்கைச் சிங்கங்கள்!—குலத்தமிழின் காவலர்கள்!
கோபுரத்துக் கலசங்கள்!—கோலோச்சும் நாயகர்கள்!

கடந்த காலச் செயல்பற்றி விரித்துரைக்க—
நிகழ் கால நடப்புபற்றிக் கருத்துரைக்க—
எதிர்காலத் திட்டங்களை எடுத்துரைக்க—

[இன்னும் இருக்கிறது எதிர்ப்பக்கம் பாருங்கள்...]

## வாழ்க, கண்ணதாசக்

......ஆனால் படித்தவுடன்

உச்சி குளிர்ந்துவிட்டது....!
உடல் சிலிர்க்கின்றது!

# இருக்கின்றதா, பாருங்கள்!

(அரசியல் பாணி விளம்பரத் தொடர்ச்சி...)

பொற்காலச் சிற்பி—
இரண்டாம் தலைமுறையின் எழுச்சித் தலைவர்
(அவர்) தலைமையில் மாநாடு கூடுகிறது!
உள்ளத்தில் உயர்ந்தவராம் இளைய அண்ணன் (அவர்)
கழகத்தின் கற்பூரத் தியாகிகளின், [திறக்கின்றார்!
திருவுருவப் படங்களையெல்லாம்,
கட்டுப்பாட்டின் இலக்கணமாய் நடமாடும்
(அவர்) திறக்கின்றார்!
சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிவது போல
முன்னணித் தலைவர்கள், கண்மணித் தோழர்கள்
கருத்து மழை பொழிகின்றார்!
நான்கு நாட்களும் நல்விருந்து படைக்கின்றது...!
அண்ணாவின் தம்பிகளே! ஆற்றல் மறவர்களே!
அணியணியாய் வாருங்கள்! அலையலையாய் வாருங்கள்!
புகழ்ப்பரணி பாடிடுவோம்! புதுச் சரிதம் படைத்திடுவோம்!
புறப்பட்டு வாருங்கள்!

இவற்றையெல்லாம் படிக்கையில்
பக்கத்திலிருந்த அன்புத் தம்பி ஒருவர்.

"நம் தமிழ்மொழியுணர்வும், நம் மக்களின் அரசியலறிவும் நாமும் நம் எதிர்காலத் தலைமுறைகளும் பெருமைப்படும்படி என்னமாய் வளர்ந்திருக்கின்றன பார்த்தீர்களா?
—இவற்றைப் பற்றியெல்லாம் எண்ணும் பொழுது என் மண்டை உச்சி பெருமையால் குளிர்ந்து விடுகிறது! உடல் சிலிர்க்கின்றது!" என்று சொன்னார். எங்களுக்கும் அவர் சொல்வது சரியென்றே தோன்றுகிறது! உங்களுக்கெப்படியோ?
கொஞ்சம் எண்ணிப் பாருங்களேன்!

**கலைஞர்கள்...!**

# மக்களவை

## ம : 214 : செந்தமிழ்ச் செல்வியும், மறைமலையடிகளும் பாவாணரும், தனித்தமிழும் !

(ஆசிரியர், செந்தமிழ்ச் செல்விக்கு விடுத்த மடலின்படி)

ஐயா,

நடப்புச் செல்வியில் (சிலம்: 50, பரல்: 2), ஊர்களின் பெயர் மாற்றங்கள் பற்றிய தங்களின் ஆசிரியவுரை எழுதப்படவேண்டிய நேரத்தில் மிகவும் நன்முறையில் எழுதப்பட்டுள்ளது. "செல்வி" யின் அன்பன் என்ற முறையில் எனது பாராட்டுரைகளும் நன்றியும் ஏற்றருள்க.

ஆயினும், பெரும்பாலான நேரங்களில் "செல்வி"யின் கோலம் என்போன்றோர்க்கு மிகவும் குழப்பம் அளிப்பதாய் உள்ளது. இதற்குச் சான்றாக இங்கு ஓரிரு நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகிறேன்.

செல்வி தனது அடிப்படைக் கொள்கையாக மறைமலையடிகளாரின் உயிர் மூச்சான தனித்தமிழ்க் கொள்கையையே (மொழியில் மட்டுமன்று; சமயத் துறையிலும் சேர்ந்தே) கொண்டுள்ளதாகத் தங்களால் கூறப் பெற்று வந்துள்ளது. முன்பொரு முறை ஆவியுலகில் வாழும் அடிகளார் தொடர்பாளர் (மீடியம்) வழி பேசிய செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். அதில் அடிகளார் வடசொற்கள் பலவும் கலந்த கலப்புத் தமிழிலேயே பேசியிருக்கக் கண்டேன். இஃது எவ்வாறு இருக்கமுடியும் என்பது எனக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. தாம் எழுதிய நூல்கள் அனைத்தையும் அடுத்தடுத்த பதிப்புகளில் தூய்மையான தனித்தமிழில் அடிகளார் மாற்றினார்களே, அது தாங்கள் அறியாத ஒன்றா ? உண்மை அவ்வாறிருக்க ஆவியுலகில் வாழும் அடிகளார் எவ்வாறு கலப்புத் தமிழில் பேசியிருக்க முடியும் ?

அடுத்து நடப்பு இதழில் பாவாணர் அவர்கள் தமிழக ஆளுநர் கே. கே. "சா" வுக்கு வழங்கிய பாராட்டுக்கட்டுரையும் கண்டேன். அதில் பாவாணர் அவர்கள் செய்திருப்பார்கள் என்று

கனவிலும் நினைக்கவியலா ஓரிரு பிழைகள் கண்டேன். முதலாவதாக "பி. வி. ராஜமன்னுர்" என்று ஓரிடத்தில் அச்சாகியுள்ளது. இதைப் பாவாணர் அவர்கள் 'இராச மன்னுர்" என்று தான் குறிப்பிட்டிருப்பார்கள் என்றும், தாங்களே அதனை "ராஜ மன்னுர்" என்று மாற்றி அச்சிட்டிருப்பீர்கள் என்றும் நான் முழுமையாக நம்புகிறேன். அடுத்து தமிழக ஆளுநரின் பெயரை, ஒருநாளும். மொழிப் பேரறிஞரும், மறைமலையடிகளாரின் கொள்கைக் குன்றுமான பாவாணர் அவர்கள் "ஷா" என்னும் வடவெழுத்தால் குறித்திருக்க மாட்டார்கள் என்றும் நான் உறுதிபாக நம்புகிறேன். இதனையும் தாங்களே மாற்றியிருக்கக் கூடும் என நான் நினைக்கிறேன். என்னுடைய இந்த எண்ணங்கள் தவருயின் தாராளமாகத் தாங்கள் என்னைத் திருத்துங்கள் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

பாவாணரின் இக் கட்டுரையைப் படித்த என் நண்பர்களில் பலரும், "பாவாணர் போலும் சிறந்த மொழிப் பேரறிஞர்களாலேயே தனித்தமிழில் எழுத முடியவில்லை என்பது எதைக் காட்டுகிறது? தலைகள் எல்லாம் நன்ருகத்தான் இருக்கின்றன. வால்கள்தான் தேவையின்றி ஆட்டம் போடுகின்றன. தனித்தமிழாவது வெண்டைக்காயாவது. தமிழ் மொழியும் வடமொழியினின்று தனித்தியங்க முடியாது. தமிழனும் பிராமணர்கள் அருள் (தயவு) இன்றி இனி வாழமுடியாது" என்று ஏளனம் பேசுமளவுக்குச் செல்வியின தொண்டு சிறந்து மிக்கோங்குகிறது! ஐயா, நான் மிகவும் வருந்துகிறேன்.

பாவாணர் தமது (மேற்கண்ட) பாராட்டுரையில் கூறிய, "தமிழர் பிராபணருக்குப் பிறப்பால்.........நயன்மைக் கட்சியின்......... மறைமலையடிகளின் தொண்டு கால்நூற்றுண்டும், பெரியாரின் ......நடைபெற்ற பின்பும்; பகுத்தறிவு, தன்மானம், நெஞ்சுரம் ஆகிய மூவகைக் கரணவியல்பும், பேராசிரியர் உட்பட இன்றைத் தமிழருள் நூற்றுமேனித் தொண்ணூற்றுவர்க்கு இல்லவே இல்லை" என்னும் சொற்கள் "செல்வி"யின் இதழாசிரியர் கூட்டத்திற்கும் சாலப்-பொருந்துகிறது!

பொதுவாகவே செல்வி முன்புறம் ஒரு கோலமும், பின்புறம் அதற்கு நேர்மாருன வேருெரு கோலமும் கொண்டு விளங்குவதால், நடப்பு இதழில் எழுதப்பட்டுள்ள ஆசிரியவுரை போலும் செல்வி

செய்துவரும் அரும்பெருந் தொண்டுகளெல்லாம் மறைந்து மேற்கூறிய வாறுன பல்வேறு குறைகளே மிக்கோங்கி நிற்கின்றன.

117 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழில் நிகழ்த்தப்பெற்ற 118-ஆவது பட்டமளிப்பு விழாப் பேருரைபற்றி நாம் பெருமை கொள்கிறோம். ஆனுல் அதே நேரத்தில் ஒரு கட்டுரை ஆசிரியரின் பெயரை "பி. எல். சாமி, பி.எஸ்ஸி" என்றுதான் அச்சிடுகிறோம். "பி. எல்."லுக்குரிய தமிழ் எழுத்துகளும், "பி. எஸ். ஸி"க்குரிய தமிழாக்கமும் நமக்குத் தெரியாதன அல்ல. அப்படியானுல் நாம் தெரிந்துதான் இது போலும் தவறுகளைச் செய்கிறோமா ?

ஐம்பதாண்டுக் காலத் தொண்டின் பின்னருங்கூட "செல்வி" அடிகளாரின் உயிர் மூச்சுக் கொள்கையான தனித்தமிழில் வெளிவராது போனுலும், பாவாணர் போலும் மொழிப் பேரறிஞர்களின் கட்டுரைகளையேனும் இதுபோல் மாற்றி அச்சேற்ருமல் இருக்கலாம் இல்லையா ? செல்வி போலும் தரமான இதழ்களே இவ்வாறுன முறைகளைக் கையாள்வது, என்போலும் பொதுவான தமிழ் மாந்தர்க்கு மொழியுணர்வே அற்றுப்போகுமளவு எரிச்சலூட்டுவதாய் அமைவதோடு, ஊக்கமிழக்கவும் செய்கிறது.

தங்கள் செல்வியின் தொண்டு தொடர்ந்து இவ்வாறே இருக்குமானுல், ஐம்பதாண்டென்ன, இன்னும் ஆயிரமாண்டாயினும், தாங்கள் கூறும் தமிழ் மொழியும், தமிழ் இனமும், தமிழ்நாடும் இப்போதுள்ளதைவிட இன்னும் கீழான நிலைக்குத்தான் போகுமேயன்றி, என்றுமே உயர்வடையப் போவதில்லை.

கடைசியாக ஒன்று, அறிஞரான பாவாணர் அவர்கள் தன்னடக்கம் கருதி, தமது பெயரையும், தமது பதவியின் பெயரையும் தன்மை ('அன்') விகுதியில் முடித்திருக்கலாம். ஆனுல் இதழ் வெளியீட்டாளர் (அல்லது ஆசிரியர்) அவற்றை அவ்வாறே அச்சேற்றுவது முறைதானு?"இராமலிங்கனுர்"என்றும்,'சிவலிங்கனுர்' என்றும் மற்றையோர் பெயர்களை அச்சேற்றிய தாங்கள் பாவாணர் பெயரை மட்டும் "ஞா. தேவநேயன், இயக்குநன்,......" என்று அச்சேற்றியது சரியா? இவற்றை எல்லாம் சற்று ஆழ எண்ணிப்பாருங்கள்.

"செந்தமிழ்ச் செல்வி"யின் தொண்டு மேலும் மேலும் சிறந்து விளங்கி, மொழி, இனம், நாடு ஆகியவற்றுக்கு உண்மைப்

பயன் விளையவேண்டும் என்னும், எனது பேராவலின் விளைவே இந் நீண்ட மடல். தங்கள் போலும் நல்லறிஞர்களின் நற்றொண்டில் குறைகாண வேண்டும் என்பது என் நோக்கமன்று !

வணக்கம். இன்னணம் தமிழன்பன்,

—இறை. மகிழ்நன், தஞ்சாவூர்.

ஆசிரியர் குறிப்பு :—மேற்கண்ட மடலில் உள்ள பாவாணர் கட்டுரைத் தொடர்பான செய்திபற்றிப் பாவாணர் அவர்களிடம் கேட்டதற்கு, விடையாக அவர்கள் தந்த விளக்கத்தைக் கீழே தந்துள்ளோம் :

செந்தமிழ்ச் செல்வி ௫0-ஆம் சிலம்பு, ௨-ஆம் பரலில் வெளி வந்த, தமிழ்நாட்டு ஆளுநர்க்குப் பாராட்டுக் கட்டுரையில், கே. கே. சா. (ஷா) என்றும், பி. வி. அரச (ராஜ) மன்னாருமே என்றும், வரவேண்டிய சொற்கள், தவறுதலாக, கே. கே. ஷா என்றும், பி. வி. ராஜமன்னாருமே என்றும் வந்துவிட்டன.

இவற்றைத் திருத்துமாறு அடுத்த பரலுக்கு எழுதியும், இதழாசிரியர் திரு. வ. சு. அவர்கள் திருத்தவில்லை.

அதனால், தனித்தமிழ்க் கொள்கை விடப்பட்டதோ என்று ஐயுறற்க.

அயற்சொற் கிளவி அயலெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்பது, உ. த. க.-வின் உயிர் நாடிக் கொள்கையாதலால், இனி மேல், பிறைக்கோட்டுளன்றி அயலெழுத்துக்களும் அயற்சொற்களும் வரா என்பதைத் திட்டமாய் அறிந்து கொள்க.



## ம : 215 : மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டங்கள் !

அன்புடையீர்,

வணக்கம். தமிழ் வளர்க்கும் தமிழரசின் இச்செயலைத் தாங்களும் எழுதவேண்டும் என விரும்புகிறேன்.

"மதுரைத் தமிழ்ச் சங்கம் நீண்ட நெடு வரலாறு உடையது. இனிய தமிழின் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் முச்சங்கங்கள் ஆற்றிய தொண்டு அளப்பரிது. அச் சங்கங்களின் வழியில் நான்

காம் சங்கமாக மதுரையில் 1901-ஆம் ஆட்டை முதல் தமிழ்த் தொண்டு ஆற்றி வருகிறது. மறைந்த பல இலக்கியங்களை உலகிற்குக் காட்டியதே இச்சங்கம் என்றால் மிகையாகாது. தமிழில் 'புலவர்' பட்டமொன்றை ஏற்படுத்திப் பலரும் தமிழ்ப்படிக்க ஊக்குவித்ததும் இச்சங்கமே என்பது பொய்யுரையன்று.

சென்னைப் பல்கலைக் கழகம் புலவர் பட்டத்தை ஏற்படுத்த முனைந்தபோது, அதற்குப் பாடத் திட்டம் வகுத்து முறைப்படுத்தியதும் இச்சங்கமே. இத்தகு பெருமையுடைய இச் சங்கத்தால் கொடுக்கப்பட்ட புலவர் பட்டங்கள் தமிழாசிரியர் பணிக்குத் தகுதியுடையது எனப் பக்தவத்சல அரசு கட்டளை பிறப்பித்து, அதன்படி பணியும் கொடுத்தது.

ஆனால், கலைஞர், பண்டாரகர். கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராய் இருக்கும் இந்நாளில் 31—1—76-க்குப் பின்னால் கொடுக்கப்படும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டங்கள் தமிழாசிரியர் பணிக்குத் தகுதியன்று என அரசு கட்டளையிட்டது. அதோடு மட்டுமன்றி '76-ஆம் ஆண்டு வரை தகுதியிருந்தும் 3—9—'75-ஆம் நாளன்றே மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டங்கள் தமிழாசிரியர் பயிற்சிக்குத்தகுதியில்லை என அறிவித்து விட்டது. 1—6—'75 முதல் துவங்கும் தமிழாசிரியர் பயிற்சிக்கு எல்லாப் பயிற்சிக் கல்லூரிகளிலும் தமிழ்ச் சங்கப் புலவர்களை சேர்த்துக் கொண்டு எக்காரணத்தினாலோ இடையிலே தகுதியில்லையென அனுப்பிவிட்டார்கள்.

தமிழ் வளர்த்த சங்கத்தால் கொடுக்கப்பட்ட தமிழ்ப்புலவர் பட்டங்களைத் தமிழ்ப்பகைவர் பக்தவத்சலனார் தகுதியுடையது எனப் பெருமைப்படுத்தினார். தமிழால் அரியணை ஏறிய கலைஞர் அவர்கள் தகுதியில்லையெனச் சிறுமைப்படுத்துகிறார். தமிழ்ச் சங்கத்தால் புலவர் பட்டம் பெற்றவர் ஐயாயிரம் பேர் இன்றுள்ளனர். அவர்களின் எதிர்காலம் என்ன ? தமிழுக்காகவே தம்மை முழுமையாகக் கொடுத்த அவர்களின் எதிர்கால வாழ்வு வெறுமையோடு-ஏக்கமோடு முடியவேண்டியதுதானா ?

தமிழே மூச்சு, தமிழே வாழ்வு, என நொடிக்கொரு முறை கூறும் தமிழக அரசே! தமிழைப் படித்தவர்கட்கு நீங்களே தரும் பரிசு இதுதானா ! பல்கலைக் கழகப் புலவர் பட்டத்திற்குத் தாயாய் இலங்கும் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டத்திற்குத் தாங்கள் தரும் பெருமை இதுதானா? எல்லாப் புலவர் பட்டங்களையும் ஒரே நிலையாக்கி—எந்தவகைப் பாகுபாடுமின்றிச் சமமென்ற நிலையினை உருவாக்கி விரைவில் கட்டளை பிறப்பிக்க வழியமையுங்கள்.

—புலவர். கருமலைத் தமிழாழன், தருமபுரி.

பெரியாரை நினைக்கின்றோம்!
பின்பற்றுகின்றோம்!

# பெரியாரின் தமிழ்ப்பற்று.

பெரியார் ஈ. வே. இரா.-வுக்குத் தமிழ்ப்பற்றே இல்லை என்று பலரும் நினைக்கின்றனர். எனவே, அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் திராவிடர் கழகத்தினரும் தமிழ் என்று சொன்னாலே முகஞ் சுளிக்கின்றனர். இதற்கெல்லாம் 'தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி' என்று பெரியார் தம் இறுதிக் காலத்தில் கூறிவந்ததையே அவர்கள் கரணியமாகக் காட்டுகின்றனர். அவரின் தாய்மொழி கன்னடமாக இருந்ததும், அவர் மேல் தவறான கருத்துக்கொள்ள வேறொரு கரணியமாக விருந்தது. இது தவறு ஆகும். பெரியாருக்குத் தொடக்கத்தில் நம் எல்லாருக்கும் இருப்பது போலவே தமிழ்ப்பற்று மிகுதியாக விருந்தது. தமிழைக் கலப்பின்றித் தனித் தமிழாகவே தூய தமிழாகவே எழுதவேண்டும், பேச வேண்டும் என்பதை அவர் உறுதியான கருத்தாகக் கொண்டிருந்தார் என்பது அவரின் தொடக்கக் கால வரலாற்றில் தெரிய வருகின்ற ஓர் உண்மை. இதனை எவரும் மறுக்க முடியாது. 'தமிழர் தலைவர்' என்னும் தலைப்பில், அவர் வரலாற்றை அவர் காலத்திலேயே எழுதிய திரு. சாமி. சிதம்பரனார், "ஈ. வே. இரா. வீட்டு மொழி கன்னடமாயினும் தமிழையே தாய்மொழியாகக் கொண்டிருப்பவர். அளவு கடந்த தமிழ்ப்பற்றுள்ளவர். தமிழ் மொழியைப் பேணவேண்டுமென்பதில் அவருக்கிணை எவருமிலர்" என்று எழுதியுள்ளார், (தமிழர் தலைவர்-பக்கம் 192)

தமிழ்நாட்டில் இந்தி நுழைக்கப் படுவதைக் கடுமையாக எதிர்த்து, "இந்தியைப் பொது மொழியாக்குவதால் நாட்டிற்கு நன்மையில்லை. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகும். "தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும்" என்று பல்லாயிரக் கணக்கான கூட்டங்களில் பேசியும், பல கட்டுரைகள் எழுதியும் வந்ததுடன், இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு பலமுறை சிறையும் சென்றுள்ளார்.

பெரியாரின் கல்வி திண்ணைப் பள்ளிக்கூடத்துடன் முற்றுப் பெற்றதால், அவருக்குத் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமையோ, ஆராய்ச்சி யறிவோ இல்லாதிருந்தும், தமிழ்மொழியின்பால் மிகுந்த

ஈடுபாடும், அதன் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும் கொண்டிருந்தார். அதற்குக் கரணியம் தொடக்கக் காலத்தில் அவர் கொள்கைக்கும் தொண்டுக்கும் துணையாக நின்றவரில் பலர் பெரும்புலவர்களும், தமிழ் அறிஞர்களுமாக இருந்தனர். மறைமலையடிகள், திரு. வி. க., கா. சுப்பிரமணியனார், சாமி சிதம்பரனார், அ. பொன்னம்பலனார், ப. சீவானந்தம், கே. எம். பாலசுப்பிரமணியம், குத்தூசி குருசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், மா. சிங்காரவேலு முதலிய அறிஞர்கள் பலர் பலவகைகளில் அவருடன் ஒத்துழைத்தனர். எனவே, அவர் தமிழைப்பற்றி உயர்வாக எண்ணவும், அதன்மேல் பற்றுக்கொள்ளவும், அதன் தூய்மையையும் வளர்ச்சியையும் கெடுக்கவந்த வடமொழி, இந்தி போன்ற பிறமொழிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவும் கருத்தும் துணிவும் கொண்டிருந்தார்.

'தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி' என்று அவர் பேசத் தலைப்பட்டதும், இந்தியெதிர்ப்பைக் கைவிட்டதும், முழுக்க முழுக்க புராணங்களைப் பற்றியும், இராமாயணம் பற்றியுமே பேசித் தம் பீடு குறைந்து போனதும், அவருடைய இறுதிக் காலத்தில் தான். அப்பொழுது அவரைச் சுற்றியிருந்தவர்களுக்கு ஆழ்ந்த தமிழ்ப் புலமையோ, தமிழர் வரலாற்றறிவோ, மொழியாராய்ச்சித் திறனோ, தமிழ்ப்பற்றோ கொஞ்சமும் இல்லை. வெறும் புராணப் பேச்சுகளைப் பேசுவதற்கும், மதப் போராட்டங்களை நிகழ்த்துவதற்கும், அவ்வப்பொழுதுள்ள அரசியல் நிலைகளைப்பற்றி வக்கணை செய்வதற்கும், தமக்கு வேண்டியவர்களுக்கும், வேண்டியவற்றைத் தந்தவர்களுக்கும் கல்லூரிகளிலும் அரசுப் பணிகளிலும் நுழைப்பதற்காகப் பரிந்துரை செய்வதற்குமே, அவர்கள், பெரியாரைப் பயன்படுத்திக் கொண்டனர். தேவையற்ற அப்புராணப் பொழிவுகள் செய்வதற்காக நாள்தோறும் உடலாடி, உள்ளம் சோர்ந்து, நோய் வாய்ப்பட்டுத் துன்புற்றுத் துவண்டுபோன நிலையிலும், ஊரூராய் அவரை இழுத்தடித்துக் காசு பண்ணிக் கொண்டனர். எனவே, வருவாயற்ற தூய தமிழ்த்தொண்டை, அவர்கள் அவர்க்குக் கவனப்படுத்தவோ, அதற்கு ஊக்கந்தரவோ முனைந்திலர். அவருடைய மெய்யான மொழி, இன, நாட்டுப் போராட்டங்களுக்கும், கருத்துப் பரப்புதல்களுக்கும் உண்மையாகத் துணையாயிருந்த குத்தூசி குருசாமி, தி. பொ. வேதாசலம் போன்ற நெடுநாளைய மெய்த் தொண்டர்களை அவரிடமிருந்து பிரித்தார்கள். எனவே, பெரியாரை வைத்து மக்களிடம் எவ்வளவு கறந்து கொள்ளமுடியுமோ, அவ்

வளவையும் கறந்து கொண்டதுடன், சூழ்ச்சிகள் நிறைந்த அரசியல் பூசல்களில் தலையிடச்செய்து, அவரின் புரட்சியார்வத்தையும் கெடுத்தனர். இறுதிக் காலத்தில் இந்த நாட்டு மக்களின் விடிவுக்கு அவரை நம்பியிருந்தவர்களையும், அவர் நம்பியிருந்தவர்களையும், அவரிடம், அவர்கள் நெருங்க விடவில்லை. எனவே, இறுதியாகத் தொடங்கவிருந்த இன, மொழி, நாட்டு விடுதலைக் கான பெரும் போராட்டம், தள்ளிப் போடப் பெற்றுக்கொண்டே வந்து, இறுதியில் ஒன்றுமில்லாமலே போய்விட்டது. ஆகவே, பிற்காலத்தில், தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் வாயில் வந்த கூற்று, அவருடைய உண்மையான உள்ளக் கருத்தன்று. சமயங்களைத் தாக்குவதற்காக, மொழியையே தாக்க முற்பட்டதும், அவருக்குக் கற்பிக்கப் பட்டதுமான ஒரு கருத்தே அது.

தமிழினத்தை எவரேனும் தலைதூக்கி நிறுத்த விரும்பினால், அவர்க்குத் தலையாய தகுதியாக இருக்கவேண்டுவது தமிழ்ப்பற்றேயாகும். தமிழ்ப் பற்றில்லாத எவனும் தமிழர்களுக்குத் தலைமை தாங்க முடியாது. இன்னுஞ்சொன்னால், தமிழறிவோடு கூடிய வரலாற்றறிவும், துணிவும், நடுநிலைமையும், வாழ்க்கைப் பற்றின்மையும், பட்டம் பதவிக்கு அங்காந்து திரியாத பொது நல வுணர்வும் கொண்ட ஒருவர்தாம் தமிழினத்தை அதன் அடிமைக் கூறுகளிலிருந்து விடுவிக்க முடியும். அந்தக் கூறுகள் அனைத்தும் நிறைந்திருந்த பெருந்தலைவர் பெரியார். ஆனாலும், அவர் இடைக்காலத்தில் செய்த ஓரிரு தவறுகளாலும், இறுதிக் காலத்துத் தம்மையும் தம் கொள்கையின் ஆணி வேரையும், பூசல்காரர்களிட மிருந்தும் அரசியல் வாணிகர்களிடமிருந்தும், கட்டிக் காத்துக் கொள்ளாத கரணியத்தாலும், அவர் தம வாழ்வுக் கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாமலும், அவரையும் முழுமையாக இத் தமிழினம் பயன்படுத்திக் கொள்ள வியலாமலும் போய்விட்டது. இனி, இதற்காக வருந்துவதில் பயனில்லை. இனியேனும் தமிழர்கள் தமக்கு உழைக்க முன்வரும் தலைமையைப் பற்றிக் கண்ணுங் கருத்துமாக விருந்து பின் பற்றியும் கட்டிக் காத்துக் கொள்ளவும் வேண்டும்.

பெரியாரின் இரண்டாவது நினைவாண்டு இது. அவரது நினைவாக, இக்கால், அவரது தொண்டின் தொடக்கக் காலத்தில் தமிழ் மொழி பற்றிய அவருடைய கருத்துகள் எவ்வாறிருந்தன என்பதை மட்டும், இங்கே ஓரிரு சான்றுகளுடன் வெளியிட்டுள்ளோம். இக்

கருத்துகள் அன்று அவர் பேசியனவும், எழுதியனவும் ஆகும். அவருடைய நடையில் உள்ள பிறமொழிச் சொற்கள் மட்டும் நீக்கப்பட்டுள்ளன. மற்றபடி இவற்றிலுள்ள எழுத்தும், கருத்தும், உணர்வும் முற்றும் அவருடையனவே. உண்மையாகத் தமிழகத்தின் முப்படி முன்னேற்றத்திற்கும் உழைக்க விரும்பும் மெய்ம்மைத் தமிழ்த் தொண்டர்களும், திராவிடக் கழகத் தோழர்களும், இவற்றை ஊன்றிப் படித்துப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## பெரியார் நினைவாக
## அவருடைய பேச்சும், எழுத்தும்

"ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப் பற்றேயாகும். மொழிப் பற்றிராதாரிடத்து நாட்டுப் பற்றிராதென்பது உறுதி. நாடுஎன்பது மொழியை அடிப்படையாகக் கொண்டியங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்று பெருகவேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

தமிழ்மொழியின் பழமையையும், தமிழ் மக்கள் நாகரீகத்தையும் பழந்தமிழ் நூல்களில் காணலாம். தமிழரசர்கள் யவனம், உரோமாபுரி, பாலத்தீனம் முதலிய நாடுகளோடு வாணிகம் செய்ததும் அவ்வாணிகத்திற்கேற்ற தொழில்கள் நாட்டில் நிலைத்திருந்ததும், பிறவும் தமிழ்நாட்டின் முழுமுதல் தன்மையை விளங்கச் செய்யும். அத்தகைத் தமிழ்நாடு இப்பொழுது சீரும் சிறப்புமிழந்து அல்லலுறுகின்றது.........தமிழ் நாட்டில் பிறந்தவர்களுக்கு மொழிப்பற்று கட்டாயம் தேவை தேவை என்று சொல்கின்றேன். வங்காளிக்கு வங்க மொழியில் பற்றுண்டு; மகாராட்டிரனுக்கு மகாராட்டிர மொழியில் பற்றுண்டு; ஆந்திரனுக்கு ஆந்திர மொழியில் பற்றுண்டு; ஆனால் தமிழனுக்குத் தமிழ் மொழியில் பற்றில்லை. இது பொய்யோ? தமிழ் நாட்டில் தமிழ்ப் புலமை மிகுந்த தமிழர்கள் எத்தனைப்பேர்; ஆங்கிலப் புலமையுடைய தமிழர்கள் எத்தனைப் பேர், என்று கணக்கெடுத்தால் உண்மை விளங்கிப் போகும். தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதிருக்கும் வரை தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்.

(1924—திசம்பர்-திருவண்ணாமலை-30-ஆவது பேராயக்கட்சி மாநில மாநாட்டுத் தலைமையுரை.)

o o o

“இந்தியைப் பொதுமொழியாக்குவதால் நாட்டிற்கு நன்மையில்லை. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகும். தமிழ்மொழியின் வளர்ச்சியும் குன்றும்,”

(7—3—1926 குடியரசுக்கட்டுரை)

o o o

“இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் வல்லாண்மையை நிலை நாட்ட, வடமொழிக்கு உயர்வு கொடுக்கப் பல வழிகளிலும் சூழ்ச்சி செய்து, உலக வாழ்க்கையில் ஓர் ஒடிந்துபோன குண்டூசிக்கும் பயன்படாத மொழியாகிய அவ்வட மொழிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது நெடுநாளாகத் தமிழ் மக்கள் கவனித்து வரும் செய்தியாகும்.”

—(10-5-1931—குடியரசு ஆசிரியவுரை)

o o o

“தாய்மொழி என்பதற்காகவோ, நாட்டுமொழி என்பதற்காகவோ எனக்குத் தமிழ் மொழியிடம் எவ்வகைப் பற்றும் இல்லை. அல்லது தமிழ் தனி மொழி என்பதற்காகவோ, மிகப் பழையமொழி என்பதற்காகவோ எனக்கு அதில் பற்றில்லை. பொருளுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்றுக் கிடையாது. அது மூடப்பற்று. குணத்தினாலும், அக்குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காகவும் தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக்கூடும். எனது மொழி, எனது நாடு, எனது மதம் என்பதற்காகவோ எனது பழமையானது என்பதற்காகவோ ஒன்றையும் நான் பாராட்டுவதில்லை.

எனது நாடு என் கொள்கை நோக்கத்திற்கு உதவாது என்று கருதினால்—உதவும்படி செய்ய முடியாது என்று கருதினால்-உடனே விட்டு விட்டுப்போய் விடுவேன். அதுபோலவே எனது மொழி என்பதானது எனது கொள்கைக்கு—என் மக்கள் முற்போக்கு அடைவதற்கு—மானத்துடன் வாழ்வதற்குப் பயனளிக்காது என்று கருதினால், உடனே அதை விட்டுவிட்டுப் பயனளிக்கக் கூடியவதைப் பின்பற்றுவேன்.

அதுபோல்தான் நான் தமிழினிடத்தில் அன்பு வைத்திருக்கின்றேன் என்றால், அதனிடத்தில் அதன் மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையும் அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பேற்படும் அளவையும் எண்ணி மதிப்பிட்டே நான் தமிழனிடம் அன்பு செலுத்துகின்றேன். அப்படியேதான் மற்றொரு மொழி நம் நாட்டில் புகுத்

தப்படுவதைப் பார்த்து அதனுல் நமக்கு ஏற்படும் இழப்பை அறிந்து பொறுக்க முடியாமல்தான் எதிர்க்கிறேனே ஒழிய, புதியது என்றோ, வேறு நாட்டினது என்றோ நான் எதிர்க்கவில்லை. ஆதலால் விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் அதனதன் பலன்தான் காரணியம் என்பதை உங்களுக்கு மறுபடியும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ், இந்நாட்டு மக்களுக்கு எல்லாத் துறைக்கும் முன்னேற்ற மளிக்கக் கூடியதும் உரிமையளிக்கக் கூடியதும், மானத்துடனும் பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்க்கையளிக்கக் கூடியதும் ஆகும் என்பது எனது கருத்து. ஆனுல் அப்படிப் பட்டவையெல்லாம் தமிழிலேயே இருக்கிறதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லை என்ருலும் மற்ற பல இந்திய மொழிகளைவிட அதிகமான முன்னேற் றத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய கலைகள், பழக்க வழக் கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என அறி கிறேன். ஆதலால் தமிழுக்குக் கேடு உண்டாகும் என ஐயுறத்தக்க வேறு எந்த மொழியும் விரும்பத் தகாததேயாகும்."

(21-7-1939—கோவை—கல்லூரி மாணவர் மன்ற உரை)

o o o

தமிழ் புத்தகம் என்பது தூய தமிழில் எழுத(ப்பட)வேண் டாமா? அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்கள் இல்லையா ? நமது தமிழ் நாட்டின் பழக்கவழக்கம், நாகரிகம் அதில் இருக்கவேண்டாமா, என்று கேட்டால், நம்மவர்களுக்குள்ளாகவே மொழிப் பற்று, மொழிப்பற்று என்று நன்மைபேசி நம்மை ஏமாற்றுபவரும், பிராமண சீடர்களுமான சிலர், உடனே பிராமணர்களுக்கு வழக் குரிமை (வக்காலத்து) வாங்கிக்கொண்டு, "சமசுக்கிருதச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழுக்குப் பெருமை குறைந்துபோகாது; அப் படிக் கலப்பதுதான் மொழியின் முன்னேற்றம்; 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினுலே' என்று அமைவு சொல்லுவதோடு, இதிலுமா சாதி வேற்றுமை?" என்கிருர்கள். அப் படியானுல் தமிழ்ச் சொற்களோடு அடிக்கடி இங்கிலீசு முதலிய மொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில், எழுதுவதில் என்ன குற்றம்? நமது வீட்டுப் பெண்களிடம் நாம் 'தண்ணீர் கொண்டு வா' என்று சொல்லுவதற்குப் பகரமாக, நம்மால் சரியாகப் பலுக்க வும், தமிழில் எழுதவும், பழக்கமும் வாய்ப்பும் இல்லாத சமசுக்கிருதச் சொல்லாகிய "ஜலம் கொண்டு வா" என்று சொல்லுவது குற்ற

மில்லையானால், அதற்குப் பகரமாக 'வாட்டர் கொண்டுவா' என்று ஆங்கிலச் சொல் சொல்லுவதில் தப்பென்ன? தனித்தமிழ் என்கிற சொல்லுக்கும், மொழிப்பற்று என்கிற சொல்லுக்கும் பொருள்தான் என்ன? இம்மாதிரி மொழிப் பற்றிலிருந்தே, இவர்களது நாட்டுப் பற்றின் தகுதியையும் அறிந்து கொள்ளலாம். பழையன கழிந்து புதியன புகுவதாயிருந்தால் நமக்கும் கவலையில்லை. புதியவை வந்து வலுக்கட்டாயத்தில் புகுந்து கொண்டு, பழையவற்றையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதானால் அதைப் பொறுத்துக் கொண்டு அதற்குச் சார்பாகப் பேசுவது என்பது மொழிக்கு இரண்டகமும், இன வஞ்சகமும் ஆவதோடல்லாமல், தமிழ்த்தாயின் கற்பைத் தமிழ்ப் பகைவர்களுக்குத தந்நலத்திற்காக விற்றவர்கள் என்றுதான் சொல்லவேண்டும்."

(7–3–26 குடியரசிலும், 1937–இல் பகுத்தறிவு மலர்-2. இதழ் 9-இலும் வந்த கட்டுரை.)

## உலகத் தமிழ்க் கழக மாவட்ட அமைப்பாளர்க்கு அறிவிப்பு.

உ. த. க. மாநில மாநாடு அண்மையில் சென்னையில் நிகழ விருக்கின்றது. மாவட்ட அமைப்பாளர் அனைவரும் இன்னும் இரு மாதத்திற்குள் ௭00 உருபா தண்டிப் பொருளாளர்க்கு அனுப்பிடல் வேண்டும். இன்றேல், பதவியினின்று விலக நேரும்.



தலைவர்,
உலகத் தமிழ்க் கழகம்.


## "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்,
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 24 உருபா | 24 உருபா. |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 12 ,, | 12 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# வடநாட்டுப்பக்கம் போன தென்மொழி அன்பர் ஒருவர் கொண்ட திகைப்பு!

—நயினி (அலகாபாது) 16-12-75

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஐயா அவர்களுக்கு!

வணக்கங்கள்!

நானும் என் உதவியாளரும் நலமே. உடன் மடல் விடாமைக்குப் பொறுக்க. இங்குத் தங்குமிடம், பிற சூழல்கள் உடன் நன்கமையாமல் மடலிடக் காலங் கடந்து விட்டது.

வந்தவுடன் சிலநாள்கள் அலகாபாத்திலேயே ஒரு விடுதியில் தங்கியிருந்தோம். அங்கிருந்து நான் செல்லும் T. S. L அலுவலகம் ஏறத்தாழ 10-12 கி. மீ. தொலைவில் உள்ளது. அலகாபாத்திலிருந்து இங்கு வர, போக்குவரத்து வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. நகரப் பேருந்துகள் எப்போதோ ஒருமுறை, தவறி வரும். சில நேரங்களில் அந்நகரப் பேருந்துக்காக மூன்று மணி, அதற்கு மேலும்கூட, கால் கடுக்க, எரிச்சலுடன் நின்றதுண்டு. நமது சென்னை நகரப் பேருந்துப் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் இது மிக மிக மட்டம். நூற்றுக்கு இரண்டு மூன்று பங்குதான் தேறும். மேலும், இங்கு ஓடும் பேருந்துகள் மிக மிகப் பழையவை! அவர்கள் பாட்டனுக்குப் பாட்டன் காலத்தவை போலும்! தப்பித் தவறிப் பக்கங்களில் சாய்ந்து உட்கார்ந்தாலோ, அன்றிப் பாராமல் இருக்கைகளில் அமர்ந்தாலோ, அங்குத் துருத்திக் கொண்டிருக்கும் ஆணியோ, தகரமோ நமது சட்டையை அல்லது காலுறையையோ பதம் பார்த்து விடும். நாகரிகமற்ற சாய்க்கடை நிரம்பிய நகரமிது. இன்னும் சுற்றிப் பார்க்கவில்லை. ஓரிரு கிழமைகளில் இயலும் என எண்ணுகிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக நயனியிலேயே ஒரு கேரளக்காரருடன் தங்கிவிடுகிறேன். இன்னும் தனியறை ஏதும் எடுக்கவில்லை. இவ் வட்டாரத்தில் ஒரே ஒரு தமிழரைத்தான கண்டேன், சிலர் நயினி தொடர் வண்டி நிலையம் அருகிலும் அலகாபாத்திலும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நேரமின்மையாய் அவர்களைச் சென்று காணவில்லை. விரைவில் காண முயலுவேன். நான் கண்ட தமிழர் பெயர் சிரிநிவாசன், சோலையார்பேட்டை அருகிலிருந்து வந்தவர். இங்கு ஒரு தனியார் குழுமத்தில் பணியாற்றுகிறார் ஓரளவு படித்தவர் எனத் தோன்றுகிறது. இங்குப் பணியாற்றும் தென்னிந்தியர்களில் 90 விழுக்காட்டினர் கேரளாவினர். 15-ஆம் பக்கலன்று எங்கள் இயக்குநர் இங்கு வந்திருந்தார்......அவர், இந்த நிலையாக வேறொருவரை அமர்த்த எண்ணுவதாகக் கூறினர். அப்படியிருப்பின் ஓர் உ. பி. வட்டத்தைச் சேர்ந்தவரைப் போடுவார் எனத் தோன்றுகிறது. எனவே விரைவில் நான் சென்னை திரும்பிவிடுவேன் என நினைக்கின்றேன்.

அன்புடன்,

—குன்னத்தூர் ச. தம்பி, நயினி, (உ. பி.)

''உயிர் தமிழுக்கு! உடல் மண்ணுக்கு'' என்று அரிமா முழக்க மிட்டு ஆர்த்தெழுந்த மறத் தமிழ்நாட்டிலே, இன்றுள்ள தமிழன் நிலை என்ன? தமிழ்மொழியின் நிலையென்ன? ஆரிய அடிமைத் தளையில் சிக்குண்டு மீளாப் பெருந்துயர் அடைந்துளது. எனினும், ஏக்கப் பெருமூச்சுதான் எச்சம். பாவேந்தன், தவத்திரு மறைமலை அடிகளார், மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் ஆகியோர் பிறந்த இத் தண்டமிழ் நாட்டிலே, இன்றைய மாணவச் செம்மல்களின் நிலையை எண்ணிப் பார்த்தால் நெஞ்சக் கவற்சியும், வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையுந்தாம் ஏற்படுகின்றன.

இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் தமிழுக்காக உயிர்விட்ட மாணவச் செல்வங்களின் வழித்தோன்றல்கள், ''இந்தித் திரைப் படங்கள்'' பார்ப்பதையே தங்களின் தலையாய கடமையாகக் கொண்டுள்ளனர். இந்நிலை என்று மாறுமோ! தமிழ் மொழி ஏற்றம் அடையுமோ! எங்கும் தமிழ், ''எதிலும் தமிழ்'' என்று வீர முழக்க மிட்ட வண்டமிழ் நாட்டின் தலைநகரிலும், மற்றுமுள்ள அனைத்து நகரங்களிலும் ''இந்தித் திரைப்படங்கள்'' ஏறுநடை போட்டு தமிழ் மறவர்களின் தலைமையில் ''வெள்ளி விழா'', ''பொன் விழா'' கொண்டாடுகின்றன. தமிழ் மொழிக்காக, தமிழ்ப் பெருங்குடி மக்க ளுக்காக, தமிழ் நாட்டிற்காக ஆளும் தமிழக அரசு இந்த ''விழாக் களை'' வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. என் னென்று சொல்வது? பெயர்ப் பலகையின் தமிழாக்கம் குறித்து, ஆரியப் பார்ப்பன (தமிழ்) இதழொன்று, தமிழாக்கம் செய்த பெயர்கள் புரியவில்லையென விளம்பரம் செய்து வயிறு வளர்க்கின் றது. இத்தகைய இதழ்கள்தாம் அதிகம் விற்பனையாகின்றன. வண டமிழ் நாட்டில். இத்தகைய மூன்றுந்தர இதழ்களை, விற்பனைக்கு உரிமம் அளிக்கின்ற நாள்வரையில் தென் தமிழ்நாடு மேன்மை யடையா. இந்நிலைகளை தகர்த்தெறிய ஆர்த்தெழுந்து தனித்தமிழ்க் கொள்கை வழி நின்று உழைப்போம்! உயர்வோம்!! வெல்க தனித் தமிழ்நாடு.

—கல்லை. அருட்செல்வன்,

—நல். இளஞ்செழியன், சுள்ளெறும்பு.

**0 : 496 :** 'தென்மொழி' வெளிவரக் கண்டு உளம் மிக மகிழ்வு பெற்றேன்; தென்மொழியில் தங்கள் 'பழம்'—கருத்தில், கனிவில் இளமையுற்ற பாடலைக் கண்டேன்; இதுபோல் தங்களின் 'பழம்' பாடல் காண ஆவல் 'தென்மொழி'யில் திங்கள் தோறும் வெளி யிட்டு எம் உள்ள நசையினை நிறைவேற்றிடல் வேண்டுமெனத் தங் களைப் பணிவுடன் வேண்டுகிறேன். நம் 'தென்மொழி' இதழுக்குத் தடையிட இப்போதைய சட்டங்கள் பயன்படுத்தப் பெறும்; ஆகவே, ஒருபுறம் வருத்தம்; இருப்பினும்; எத்தடை வரினும், எங்களிதழ் வெளிவரும் என்ற நினைப்பு 'வந்து' வருத்தத்தைப் போக்கிட வழி வகை செய்கிறது.

—வெ. கு. அரசு, மதுரை-10.

**0 : 497 :** அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம், நலம். நலமே விளைக. கட்டுண்ட கைகளுடன் நிற்கும் உங்கள் நெஞ்சுக் குமுறலுக்கு ஒருநாள் உலகம் விடை கூறியே ஆகவேண்டும். தனித்தமிழின் மாண்பினைப் பட்டிதொட்டியெங்கும் பரப்பவேண்டும். என் ஊரில் ''தமிழ்ச் சுடர்'' எனும் கையெழுத்துத் திங்களிதழ் ஒன்றைச் சுறவ முதல்நாள் தொடங்கவிருக்கிறேன். இதன் வழியாக நம் கருத்துகள் செயலாகும் நாளைக் கூவி அழைக்கப்போகிறேன். இதற்குத்தங்களின் வாழ்த்துகளையும் பட்டறிவின் கருத்துகளையும் அனுப்பும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

—சொ. முத்துமாணிக்கம், அறி. இ. பழனி.

**0:498 :** அன்புள்ள ஐயாவுக்கு, வணக்கம். தென்மொழியை இலவயமாகத் தந்தால் வாங்கிப் படிக்கும் தமிழர்கள்தாம் இருக்கிறார்கள். அப்படியும் சிலர்க்குத் தந்துகொண்டுதான் இருக்கிறேன். ஆனால், அப்படி இலவயமாகப் படிக்கும் தமிழர்கள் அரைப் பட்டினிகளோ, கஞ்சிக்கும் வக்கில்லா ஏதிலிகளோ அல்லர். தமிழுக்கும், தமிழர் நலத்துக்கும் கேடு விளைவிக்கும் நச்சுக் கருத்துகளை விதைக்கும் குமுதம், கல்கண்டு, ஆனந்த விகடன், கல்கி போன்றவற்றைப் போட்டி போட்டுக்கொண்டு, ஏங்கி எதிர்பார்த்து நின்று வாங்குகிறார்கள். நாம் வலிய அவர்களிடம் சென்று நயமாகப் பேசி எடுத்துரைத்தாலும், "வீட்டில் கடுமை, எங்கங்க முடிகிறது? சம்பளம் கட்டுபடியாவதில்லையே!" என்று பலவாறு பேசுகிறார்கள். தமிழுக்காக நாங்கள் என்று வீராப்புப் பேசும் பகட்டாளர்கள் சிலர் பார்ப்பன ஏடுகளையும், இதழ்களையும் தாம் வாங்குகிறார்களே தவிர 'தனித்தமிழ்' ஏடென்று இருக்கும் தென்மொழியையோ, வேறு இதழ்களையோ வாங்குவதில்லை. இன்னும் சிலர் மொழி (Language) புரியவில்லை என்று உடல் வளைத்து நெளித்து பற்கள் தெரியச் சிரித்துப் பல மொழிச் சொற்களையும் ஒரே நேரத்தில் தமிழுடன் கலந்து வெட்கங்கெட்டு, நா கூசாது கூறுகிறார்கள். சிலர் சிலரென்ன மிகப் பலர்க்குத் தென்மொழி நடையினையும் கொள்கைகளையும் செரிக்கமுடியாது திண்டாடுகிறார்கள். அஞ்சுகிறார்கள். 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிக் கொள்கிறார்கள். அடிமை உணர்வு அரத்தம் முழுதும் பரவிவிட்டபடியால், அப்படிப்பட்டவர்களுக்கு வேறு தூய அரத்தம் செலுத்தினால்தான் ஓரளவு உணர்வு பெறுவார்களோ என்னவோ! சிலர் வடமொழி எழுத்துகளின் ஒலிபோன்று சில தமிழ்ச் சொற்களைப் பலுக்கவேண்டும் என நம்புபவர்கள், தருக்கமிடுகிறார்கள். இன்னும் சிலர் தென்மொழியை இறையிலி (நாத்திக) ஏடு என உடும்புப் பிடியாய் நம்புபவர்கள். "நாங்கள் கடவுள், சாமி என்று நம்புபவர்கள். அருள்கனிந்து (தயவுசெய்து) இதெல்லாம் வேண்டாம்" என்று கூறுபவர்கள், சொல்லப்போனால் பலவகை மாந்தர்கள் இங்கு வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையிற்றான் தென்மொழி விற்பனை நடைபெறுகிறது. நீங்கள் மன உலைச்சல் அடையவேண்டாம். பலரும் பல நோக்கில் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் அலைபாயும் மனம் கொண்டவர்கள். (அண்மையில் தென்மொழிப் போராட்டக் காலத்தில் திசை மாறியவர்களைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.) பேசுபவர்கள் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகட்டும். அஃது அவர்களைத் தாம் பிரித்துக் காட்டும் கட்டளைக் கல் போன்றது ஆகும். நாகாக்க என்ற வள்ளுவனை வாய் கிழியப் பல மேடைகளில் ஏத்திப் போற்றிப் பேசுபவர்கள் தான் இத்தகைய இழிமொழிகளைக் கூறியிருக்கிறார்கள். காலம் இவர்களுக்கு நல்ல பாடத்தைக் கற்பிக்காமற் போகாது. அப்பொழுது இவர்கள் மனம் வருந்துவார்கள். அப்பொழுது பார்ப்போம் எந்த வாய்கள் புழுக்கின்றன என்று. ஆகவே நீங்கள் சோர்வு கொள்ளாது தொடருங்கள் தென்மொழிப் பணியை. ஆயிரமாயிரம் நன்னெஞ்சங்கள் உங்களை வாழ்த்துகின்றன. போலி-வெற்று ஆரவாரம் மிகுந்தவர்கள் விலகிவிட்டதே நன்றெனக் கருதுகிறேன். —கி. பாலு, மின்பாறை.